கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(05.03.2017 - 05 பங்குனி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 155, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ஞාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

# "இறைவனின் கொடை சிலுவையில் நிறைவடைகின்றது"

– திருத்தந்தை –

தவக்காலத்தில் நுழைந்திருக்கும் நாம், இவ்வேளையில், கடவுளுக்கும் பணத்திற்கும் இடையே இருக்கும் உறவு குறித்து சிந்திக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த 28.02.2017 அன்று செவ்வாய் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில், காலையில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றியபோது திருத்தந்தை, இவ்வாறு கூறினார்.

கடவுள் நமக்கு வழங்கும் கொடை முழுமையானது, அந்த முழுமை, கல்வாரிச் சிலுவையின் உச்சத்தை எட்டுகின்றது, "பாரும், நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே" என்று பேதுரு கேட்ட கேள்விக்கு இயேசு அளித்த பதில் பற்றி விளக்கியத் திருத்தந்தை, எல்லாவற்றையும் விட்டுவிடும் எவரும், எல்லாவற்றையும் பெறாமல் போகார் என்றும், நம் ஆண்டவர், எதையும் கொடுக்கும்போது குறைவாகக் கொடுப்பதற்குத் திறனற்றவர், அவர், நமக்கு ஏதாவது கொடுக்கும்போது, தம்மையே முழுமையாகக்....

☛ 15

# மொசாட்டின் இலத்தீன் திருப்பலி



2017 புனித யோசேவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் மியூசிக்கா செக்ரா" குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மொசாட்டின் சங்கீத இசை இலத்தீன் திருப்பலி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொட்டாஞ்சேனை புனித லூசியாள் போராலயத்தில் நடைபெற்றது. கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை மற்றும் ஐம்பதிற்கும் மேற்பட்ட குருக்கள், மற்றும் கிறிஸ்தவ அலுவலக அமைச்சர் ஜோன் அமரதுங்க மற்றும் அரசின் அமைச்சர்கள் அங்லிக்கன் திருச்சபையின் ஆயர் டொல ராஜ் கனகசபை வேறு சபைகளின் தலைவர்கள்....

☛ 15

# பூப்போன்ற தூய்மையான குழந்தைகளை கருக்கலைப்பினால் அழித்துவிட வேண்டாம்



புனித யோசேவ்வாஸ் ஆண்டில் பங்குகளை தரிசிக்க செல்லும் ஆண்டகை அவர்கள் அதனை ஆரம்பிக்கும் முகமாக மோதரை உப்புக்குளம் பங்குக்கு கடந்த வாரம் சென்றிருந்தார். இறைவன் எமக்கு கொடுக்கின்ற தூய்மையான பிள்ளைகள் இவ்வுலகை காணும் உரிமை உடையவர்கள் கருக்கலைப்பின் வழியாக அவர்களை அழித்து விட வேண்டாம் என ஆண்டகை அவர்கள் கேட்டுக்கொண்டார். உப்புக்குளம் பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. சுதந்த ஜயலால் சில்வா அடிகள் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்..

## மறைமாவட்ட குருக்களின் கூட்டம்

கொழும்பு உயர் மறைமாவட்ட குருக்களின் முதலாவது பொதுக்கூட்டம் 2017 பங்குனி மாதம் 13ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறுகிறது.

**தகவல் : அருட்பணி. ஜூட் சமந்த**
**செயலர், நிர்வாகம், ஆயர் இல்லம்**

## திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்கள்

துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு திருச்சபையில் இருந்து, செப உதவியும் பொருளுதவியும் கிடைப்பதாக!!!

## இலங்கை ஆயர் பேரவையின் உத்தியோகப்பூர்வ நியமனங்கள்

(CBCSL)



ஆயர் மேதகு M.P ஜூலியன் வின்சன்ட் பர்னாந்து (SSS) ஆண்டகை



ஆயர் மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் அண்மையில் நடந்து முடிந்த மாநாட்டில் ஆயர் பேரவையின் புதிய தலைவராக பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு M.P. ஜூலியன் வின்சன்ட் செபஸ்தியன் பர்னாந்து ( SSS ) ஆண்டகை அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை நிதி நிர்வாகக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனங்கள் கடந்த மாதம் 21ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மெண்டிஸ், பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

# கர்தினால் ஆண்டகை தனது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றார்.



கடந்த சில நாட்களுக்கு தங்களின் திருவிழாவினைக் கொண்டாட அன்னையின் திருச்சுரூபத்தை படகில் எடுத்து கடல் வழியே பிரயாணம் செய்து, தங்கள் வாழ்வை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தப் படகு சுற்றுப்பிரகாரம் பேருவளை பண்டாரவத்தை புனித லாசரஸ் பங்கைச் சார்ந்த பங்கு மக்களால் அன்னையின் திருவிழாவை முன்னிட்டு ஒழுங்கு செய்திருந்தனர். கொழும்பு உயர் மறைமாவட்டத்திலும் ஏனைய மறைமாவட்டங்களிலும் படகு சுற்றுப்பிரகாரம் என்பது ஆலயத்திருவிழாவின் ஒரு கட்டாயமான விசேட பவனி அல்ல, இதுவெளிநாடுகளில் இடம்பெறுவதைக் காணலாம். இவ்வகையான சுற்றுப்பிரகாரம் கடல் வழி வாழும் மீனவர்கள் தங்கள் பங்கு மக்களுடன் இணைந்துக்கொண்டு தங்களின் படகு மீன்பிடி உபகரணங்கள், தங்களின் வாழ்வு மற்றும் கடல் என்பன ஆசீர்பெற வேண்டியே ஒழுங்கு செய்கின்றார்கள்....

☛ 15

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் வழங்கப்படும் செய்தி

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேருவளை என்னும் இடத்தில் 19 பெப்ரவரி 2017 ஞாயிறு அன்று நடந்த துயர சம்பவத்திற்கு தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தமது உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேவேளையில் மனித தவறினால் ஏற்பட்ட இந்த கவலைக்குரிய சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது ஆன்மீக உடனிருப்பை உறுதிப்படுத்த விரும்புகின்றோம். இந்த கஷ்டமான வேளையில் இறைவன் தாமே அருகில் இருந்து, தமது உயிரை இழந்த அனைவருக்கும் முடிவில்லா அமைதியைக் கொடுக்க வேண்டுமென்று மன்றாடுவோமாக.

மேதகு ஆயர் ஜே. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மெண்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் சிறுவர் தினம் – 2017

கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினமானது இவ்வருடம் பங்குனி மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை தேவத்தை பெசிலிக்காவில் நடைபெறவுள்ளது. காலை 7.00 மணிக்கு மாணவர் பதிவும் 7.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத்தொடர்ந்து 8.30க்கு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் சிறப்புத் திருப்பலியும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் தரம் 6ற்கு மேற்பட்ட மாணவர்கள் மாத்திரமே பங்கேற்கலாம். மாணவர்கள் பாடசாலை சீருடையில் வருகைத்தரவேண்டும். பாடசாலை மற்றும் மறைப்பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பொறுப்பாளர்கள் இதனை கவனத்திற்கொண்டு செயற்படவும்.

## தூய யோசேவ்வாஸின் ஆடை கண்காட்சி

☛ 15

## தவக்கால திருயாத்திரை 2017

கொழும்பு, புறக்கோட்டை புனித பிலிப் நேரியார் ஆலயத்தில் இயங்கும் பனிமய மாதா சங்க நிர்வாகம் 32வது தடவையாக தவக்கால சிறப்பு நிகழ்வு எதிர்வரும் 19.03.2017 அன்று காலை 9.00 மணிக்கு ராகமை, தேவத்தை பெசிலிக்காவில் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி திருச்சிலுவைப் பாதை முடிவில் திருப்பலியும் பேராலயத்தில் இடம் பெற்று பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும் திருமணி ஆராதனையுடன் நிறைவுபெறவுள்ளது. இந் நிகழ்வில் இறை சிந்தனைகளை வழங்க அருட்பணி ரமேஸ் (OMI), அருட்பணி லூயிஸ் ஆரோக்கியராஜ் (திருச்சி மாவட்டம்) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் : ஜெயகுமார் பெர்னாண்டோ**

**077 7781275**



## திறந்தவெளி சிலுவைப்பாதை 05.03.2017


கொழும்பு, யோசேவ்வாஸ் மன்றம் 21வது தடவையாக தமிழ் மொழியில் ஒழுங்கு செய்யும், திறந்தவெளி பெரிய சிலுவைப்பாதை இவ்வருடம் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் 05.03.2017 தவக்காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறவுள்ளது.

இச்சிலுவைப்பாதை பிற்பகல் 2.30 மணிக்கு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய முற்றத்திலிருந்து ஆரம்பமாகி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், செக்கடித்தெரு வேளாங்கண்ணி ஆலயம் வழியாக கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயம் வந்தடையும்.

அனைவரையும் இச்சிலுவைப்பாதையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : அருட்தந்தை ஆனந்தன் பர்னாந்துபுள்ளே**

**கொழும்பு யோசேவ்வாஸ் மன்றம்**



**சந்தியாகு ஞானப்பிரகாசம்**

அவர்கள் இராஜகிரிய திரு இருதய நாதர் ஆலயத்தின் ஞான ஒளி விற்பனையாளர். இவரை தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக, மாண்புமிகு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் கௌரவிக்கப்பட்டு, கடுவெல, உயர் நீதிமன்றத்தில், சத்திய பிரமாணம் செய்துள்ளார். இவர் தேயிலைத் தோட்ட தொழிலாளியின் புதல்வனும், தலவாக்கெல்லை, புனித பத்திரிசியார் கல்லூரியில் ......

தொடர்ச்சி 15ம் பக்கம்



திருப்பாலத்துவ சபையினர், மறைபரப்பு ஞாயிறு தினத்தை சிறப்பிக்கும் திருப்பலி கடந்த 29.01.2017 ஞாயிறு 11.00 மணிக்கு அருட்தந்தை லூயிஸ் அவர்களால் நாயக்கக்கந்தை காணிக்கை அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. அதில் இப்பங்கு திருப்பாலத்துவ சபை மாணவர்கள் காணிக்கை ஒப்புக்கொடுப்பதை படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி ஜோண்**

## இலங்கை பிரான்சிஸ்கன் (OFM) சபையின் நிர்வாகப் பணியில் புதிய தலைவர்



1505ம் ஆண்டில் இருந்து இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் மேலைத்தேய போர்த்துக்கேயருடன் முதல் தடவையாக கிறிஸ்தவ விசுவாசத்தை வித்திட்டவர்கள் புனித பிரான்சிஸ்கன் (OFM) சபைத் துறவிகள் என்றால் அது மிகையாகாது. போர்த்துக்கேயருக்குப் பின் நீண்ட கால இடைவெளியை மீண்டும் இத்தாலி நாட்டு பிரான்சிஸ்கன் சபை துறவிகள் வருகையும் அவர்களது சேவையும் மறக்கமுடியாத ஒன்றாகும். காலப்போக்கில் எமது நாட்டில் ஏற்பட்ட ஒருசில மாற்றங்களினால் 1980களில் பிரான்சிஸ்கன் சபையின் பிரசன்னமும் சேவையும் மறைந்துவிட்டது.

இதன்பின்பு 1995ம் ஆண்டு தொடங்கி இன்றுவரை இத்தாலி நாட்டின் உரோமை தேசத்து கட்டளைக்கிணங்க பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த பிரான்சிஸ்கன் சபை துறவிகள் எமது மண்ணில் கோட்டைப் பகுதியில் தங்கள் பணியையும், குழுவாழ்வையும் புரிந்து வருகிறார்கள்.

இன்றைக்கு சுமார் ஆறு வருடகாலங்களாக எமது நாட்டை சேர்ந்தவர்கள் தலைமைத்துவத்தை தாங்கி பணி ஆற்றும் அவ்வேளையில், அண்மையில் இடம்பெற்ற ஐந்தாவது தலைமை அமைப்பு தேர்வில் புதிய நிர்வாக பணி தலைவராக அருட்பணி, அந்தோனிப்பிள்ளை எட்வேட் ஜெயபாலன் (OFM) அவர்களும், அவருடைய ஆலோசகர்களான அருட்பணி. அருள்நேசம் செபஸ்ரியான் லெம்பேட் (OFM) மற்றும், அருட்சகோதரர் பற்றிக் சுஜீவ பெரேரா (OFM) அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களின் இந்த புதிய நிர்வாகப் பணி இனிதே சிறக்க பிரான்சிஸ்கன் சபையினர் இவர்களுக்காக இறைவனின் ஆசீர்வாதத்தையும் மனம் நிறைந்த நல் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றார்கள்.

**தகவல் : அருட்பணி. லின்டன்** (OFM)

## புனித யோசேவ்வாஸ் அடிகளாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.





இரத்தினபுரி மறைமாவட்டத்தில் அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் தேவாலயம் இரத்தினபுரி பேராலய பங்கிற்குச் சொந்தமான எத்தோய என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. கடந்த 05.02.2017 ஞாயிறன்று ஆண்டு விழா நடைபெற்றது. திருநாள் திருப்பலியை இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிமேதகு கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா (O.S.B.) ஆண்டகையும் பங்குத் தந்தையர்கள் அருட்பணி. சுரங்க பெர்ணான்டோ, அருட்பணி சம்பத் விஜேரட்ண ஆகியோரும் ஒப்புக்கொடுத்தனர்.

ஆயர் தமது உரையிலே புனித யோசேவ்வாஸ் அடிகளார் மிகவும் விசுவாச வாழ்வு வாழ்ந்தவர். புனிதர் தமது சேவைக்காலத்தில் தம்முடன் பணிபுரிய சில மூப்பர்களையும் - அண்ணாவிமார்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டு பணி செய்தார். வேதாகமத்தின் மூலம் இறைவார்த்தையை பகிர்ந்துகொள்வதும், ஏழை - எளியோரை - நோயாளிகளை சந்திப்பதும் இவரது சிறப்பு பணியாக இருந்தது. அதுபோல் நாமும் ஒன்று சேர்ந்து பங்கில் சேவைபுரிவதோடு நமது பிள்ளைகளையும் விசுவாச வாழ்வில், நம் புனிதரின் வாழ்வில் நடத்தி செல்ல நாம் அனைவரும் இந்த ஆண்டிலே தியாகத்துடன் செயல்படுவோம் என்பதே.

இந்த தேவாலயத்தின் சிறப்பு அம்சமாக அமைவது இந்த ஆலயத்தைக் கட்டி எழுப்பியவர் இரத்தினபுரி மறைமாவட்ட முன்னாள் .....

தொடர்ச்சி 15ம் பக்கம்

## கொழும்பு உயர் மறைமாவட்ட மரியாயின் சேனையாளர்களுக்கான தவக்கால ஆயத்த உள்தியானம் 2017



கொழும்பு உயர் மறை மாவட்டத்தில் இயங்கும் தமிழ் மரியாயின் சேனை பிரசீடியங்களினதும் கியூறியாக்களினதும் மேற்சபையான பரிகார மாதா கொமிசியத்தின் ஏற்பாட்டிலும், இலங்கை மரியாயின் சேனை தேசிய ஆன்ம இயக்குநர் அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளாரின் வழிகாட்டலிலும் மரியாயின் சேனையாளர்களுக்கான இவ்வாண்டிற்கான மேற்படி தவக்கால ஆயத்த உள்தியானம் கடந்த மாதம் 10ம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை கொழும்பு 15 மோதர புனித சூசையப்பர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருச்செபமாலையுடன் ஆரம்பித்த இத்தியான நிகழ்வில் முதலாவது ஞானனொடுக்க உரையை கொமிசியத்தின் ஆன்ம குரு அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளார் வழங்கினார். அவர் தமது தியான உரையை கிறிஸ்தவ வாழ்வில் இறைவிசுவாசம், நம்பிக்கை என்ற எண்ணக்கருக்களின் ...

தொடர்ச்சி 15ம் பக்கம்

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
05, பங்குனி 2017 ஞாயிற்றுக்கிழமை.

## செபிப்பதனால் இறைவனோடும், ஒறுத்தல் தவத்தால் எம்மோடும், பிறரன்புச் செயல்களால் நம் அயலாரோடும் உறவுகளை புதுப்பித்துக்கொள்கின்றோம்.

தவக்காலம் நமது மீட்பின் காலம். நம் ஆன்மாவின் வசந்த காலம். நமது வாழ்வு நமது கையில். நமது வாழ்வை திருத்தி அமைத்து, புதுவாழ்வில் நுழைந்திடவும் நாம் நலமாக வளமுடன் வாழ்ந்திட தரப்பட்டுள்ளதுதான் தவக்காலம். இந்த பொன்னான தருணத்தை எமதாக்கிக் கொள்வோம். நாம் பிறந்தபோது எதைக் கொண்டு வந்தோம் இறக்கும்போது எடுத்துச் செல்வதற்கு. இவ்வுலகில் வெறுமையாய் பிறந்த எமக்கு இறைவன் தந்த நன்மைகளோ எண்ணிலடங்காதவை. அடிப்படைத் தேவைகள், சொத்து, கல்வி இப்படியாக நிறைய நன்மைகளைப் பெற்றிருக்கின்றோம். பெற்றுக்கொண்டே இருக்கின்றோம். ஆனால் இவை அனைத்திற்கும் ஈடாக நாம் இறைவனுக்கு எதை தரப்போகின்றோம். இதற்கான நல்ல தருணமாக இறைவனோடு பயணிக்க இந்த தவக்காலத்தை பயன்படுத்திக் கொள்வோம். எப்படி வாழ்ந்திருக்க வேண்டுமோ அப்படி வாழ்ந்திருக்க மாட்டோம். எப்படி வாழக்கூடாதோ அப்படியே வாழ்ந்திருப்போம். இதுதான் மனித இயல்பு. சிலர் பிறவியிலே நற்பண்புகள் கொண்டவர்களாக நல்லவர்களாகவே இருக்கின்றார்கள். சிலர் இதற்கு மாறாக இருக்கின்றார்கள். நாளடைவில் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் பலர் வாழ்வில் தடுமாறி, தடம்மாறி போகின்றார்கள். ஆக அனைவருக்கும் தேவையாக இருப்பது உளமாற்றம் ஒன்றே.

திருநீறு திருச்சபையின் அருள் கருவிகளுள் ஒன்று. மனவருத்தம், தாழ்ச்சி மற்றும் ஒப்புரவின் அடையாளமாக இது இருக்கின்றது. விபூதிப்புதன் அன்று எமது நெற்றியில் இடப்பட்ட திருநீறு இறை வல்லமை, அநீதி, தவறுகள், உலகப்பற்று, பாவமன்னிப்பு இவற்றை உணர்த்தி நிற்கின்றது. இக்காலத்தில் இறைவனோடும், எம்மோடும், பிறரோடும் உள்ள உறவை புதுப்பித்துக்கொள்வதற்கு இத்தவக்காலம் எம் ஒவ்வொருவரையும் அழைத்து நிற்கின்றது. செபிப்பதனால் இறைவனோடும், ஒறுத்தல் தவத்தால் எம்மோடும், பிறரன்புச் செயல்களால் நம் அயலாரோடும் உறவுகளை புதுப்பித்துக்கொள்கின்றோம். உண்மையான முழுமையான மனநிலையோடு செயற்படும்போதுதான் தவக்காலம் பொருள்தரும். வாழ்க்கை சுவர்க்கமாக மாற வேண்டுமானால் சோதனைகளை சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். சோதனையின்றி துன்பமின்றி எந்தவொரு மனிதனுக்கும் மீட்பு கிடைக்காது. போராட்டத்திற்குட்பட்ட மனிதனே வீரனாக திகழ முடியும்.

இத்தவக்காலத்தில் எமக்கு ஏற்படுகின்ற சோதனைகள் வேதனைகள் போராட்டங்கள் அனைத்தையுமே தாங்கிக் கொள்ளும் பக்குவமான மனநிலையை எமது குடும்பங்களிலிருந்தே ஆரம்பிப்போம். ஒருவரொருவர் மீது பழி பாவம் சுமத்தாமல் செய்த தவறுகளை நாமே திருத்தி மன்னிப்புப் பெற்று உறவை புதுப்பிப்போம். நாம் எமது குடும்பத்தினருக்காக எத்தனை எத்தனையோ நன்மைகளை செய்திருந்திருந்தும் சிலவேளைகளில் எம்மை தூற்றி விடுவார்கள். அச்சமயங்களில் நாம் இதையெல்லாம் அவர்களுக்கு செய்தோமே என்று சுட்டிக்காட்டி எமக்குரிய பலனை இழந்துவிடாமலும் அவர்களின் வெறுப்பையும் கோபத்தையும் பன்மடங்காக்கி விடாமலும் எமக்காக துன்புற்ற இயேசுவை ஒருகணம் நினைத்துப்பார்த்து நம்மை நாமே தேற்றிக்கொள்வோம். இதுதான் இத்தவக்காலத்தில் நாம் செய்யும் பெரிய தியாகமாகும். குடும்ப பகையுடன் நாம் திருப்பலி செல்வதும் காணிக்கை தருவதும் திருயாத்திரை செல்வதும் உபவாசமிருப்பதும் எந்த விதத்திலும் பயன் தரப்போவதில்லை. நாம் கடவுளோடு சேர்ந்து நடக்க அவருக்கு இடமளிக்க வேண்டும். அப்போது கடவுள் நம்மைத் தூய்மைப்படுத்தி வழிநடத்துவார்.

இறையாசீருடன்
ஆசிரியர்




**நோன்பு என்பது மனிதன் தான் செய்த பாவங்களுக்கான ஒரு பரிகாரமாகவும், மனமாற்றத்திற்கு அடையாளமாகவும் அமைகிறது.**

தவக்காலத்தில் நாம் நாற்பது நாட்கள் நோன்பு இருக்கின்றோம். தவக்காலமும் நோன்பும் கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவிற்கு முன் தயாரிப்பாக அமைகின்றது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பாலைநிலத்தில் நாற்பது நாட்கள் இரவும், பகலும் நோன்பிருந்ததன் அடையாளமாக இது அமைகிறது. இதை ஒரு வெளி அடையாளமாகவும் அனைவரும் பின்பற்ற வேண்டும் எனவும் சொல்லவில்லை. ஆனால் இயேசு இந்தப் பழக்கத்தை தம் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார். நோன்பு வழக்க முறைகள் பழைய ஏற்பாட்டில் பல பகுதிகளில் காணப்படுகின்றது. நோன்பு என்பது இயேசுவினுடைய வாழ்க்கையிலும், (துன்பத்திலும்) பாடுகளிலும் பங்கெடுப்பதைக் குறிக்கின்றது.

தவக்காலம் நாம் பாவ வழிகளை விட்டுவிலகவும், மனமாற்றம் அடையவும் ஒரு தகுந்த ஒரு காலமாக அமைகிறது. நோன்பு இருப்பதன் வழியாக செப தப வாழ்வு கடைப்பிடிக்கப்படுகிறது. நோன்பு என்பது மனிதன் தான் செய்த பாவங்களுக்காக ஒரு பரிகாரமாகவும், மனமாற்றத்திற்கு அடையாளமாகவும் அமைகிறது. இது நமது திருச்சபையின் வழிகாட்டுதலின் பேரில் குறிப்பாக, தவக்காலத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. நமது மேற்கத்திய மரபுப்படி தவக்கால நோன்பு நாற்பது முழுமையான நாட்களாக கடைப்பிடிக்கப்படுகிறது.

நோன்பு முறை பற்றிய பல நேர்மறையான எண்ணங்கள் புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது. நமது உடலை நோன்பின் மூலம் வருத்துவதின் மூலம் கடவுள் நம் பாவங்களை மன்னிக்கின்றார். இது கடவுளுக்கு ஏற்புடையதாகவும் அமைகின்றது. கடவுளைப் புகழும் ஒரு செயலாகவும் மாறுகின்றது. பல நூற்றாண்டுகளாக நோன்பு பற்றிய கருத்துக்களும், நேரமும் வழிமுறைகளும் ஒவ்வொரு இடத்திற்கும், மறைமாவட்டத்திற்கும் ஏற்ப வித்தியாசமாகவே இருந்துள்ளன. நமது முன்னாள் திருத்தந்தை ஆசீர்வாதப்பர் 14 மே தன்னுடைய சுற்றுமடலில் இத்தவக்காலம் மிகவும் இலகுவான முறையில் கடைப்பிடிப்பதை குறித்து காட்டியுள்ளார். இச்சுற்றுமடல் மே 30, 1741இல் அனைத்து கத்தோலிக்க நாட்டு ஆயர்களுக்கும் அனுப்பப்பட்டது. இது ஒரு எச்சரிக்கை மணியாக (அமைந்தது) ஒலித்தது.

### சுற்றுமடலில் இருந்து ஒரு பகுதி

தவக்காலம் கடைப்பிடித்தல் என்பது கிறிஸ்தவர்களின் அடையாளமாகவும் ஆதாரமாகவும் அமைகிறது. இதன் மூலம் திருத்தூதர் பவுலைப்போல இயேசுவுக்கும், சிலுவைக்கும் நண்பர்களாக மாறுகிறோம். இதன் மூலம் புது ஆற்றலையும் , சக்தியையும் இருளின் ஆட்சிக்கு எதிராகப் பெறுகிறோம். நாம் தவக்காலத்தைச் சரியான முறையில் கடைப்பிடிக்காமல் இருக்கும்போது கடவுளுடைய மகிமைக்கு இது தடைக்கல்லாக அமைகிறது. இது நமது கத்தோலிக்க விசுவாசத்திற்கு எதிராகவும் அமைகிறது. கிறிஸ்தவ ஆன்மாக்களுக்கு எச்சரிக்கையாகவும் இருக்கிறது.

☛15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# புனித சூசையப்பர் அகில திருச்சபையின் பாதுகாவலர்




புனித சூசையின் பிறப்பிடம் பெத்லகேம். ஆனால் நாசரேத் என்னும் ஊரில் தான் வசித்து வந்தார். தச்சுத் தொழில் பார்த்து வந்தவர். பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் நடுத்தர வகுப்பினர். இவரைப் பற்றி மறைநூலில் அதிகம் கூறப்படவில்லை. ஆனாலும் ஆணித்தரமான வார்த்தையின் உதவிக் கொண்டு போற்றப்படுகின்றார்.

**உதாரணமாக**

**அவர் கணவர் யோசேப்பு**

**நேர்மையாளர். (மத் : 1:19)**

1870ஆம் ஆண்டு திருச்சபை முழுவதிலும் இருந்த ஆயர்கள் ஒன்றாகச் சேர்ந்து திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதரிடம் சூசையை “அகிலத் திருச்சபையின் பாதுகாவலர்” என அறிவிக்குமாறு விண்ணப்பித்தனர். திருத்தந்தை ஆயர்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார்.

சூசைக்கும் கன்னி மரிக்குமான ஒப்பந்தம் நிறைவேறிற்று பாசுத்த ஆவி நிழலிட கன்னிகை மரியா இயேசு பாலனைப் பெற்றெடுத்தாள். பாலன் இயேசுவும் சூசைக்கு அனைத்திலும் கீழ்ப்படிந்து வந்தார். இயேசுவைக் காண காலங்காலமாக இறைவாக்கினர்களும், அரசர்களும் காத்திருந்தும் காண முடியவில்லை. சூசை மாமுனிவரோ இயேசுவைக் கண் குளிரப் பார்த்தவர். அதுமட்டுமல்ல அவரைத் தூக்கி வளர்த்தவர், முத்தங்கள் ஆயிரம் கொடுத்து மகிழ்ந்தவர், ஊட்டி வளர்த்தவர், மறைக்கல்வியும், தச்சுத் தொழிலும் கற்றுக்கொடுத்தவர்.

இவ்வளவு மாட்சிமை பொருந்திய வளனாரைத் திருச்சபை எக்காலமும் பெருமதிப்புக் கொடுத்து இவரிடம் மன்றாட்டுக்களை எழுப்பி வந்துள்ளது. திருச்சபைக்கு ஆபத்து நேர்ந்த பொழுதெல்லாம், சூசையிடம் கரம் கூப்பி மன்றாடுக்களை எழுப்பி அதற்குரிய பலன்களை சூசையிடமிருந்து பெற்று வந்திருக்கிறது. அதன் ஒளியில் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் புனித சூசையப்பரை அகிலத் திருச்சபையின் பாதுகாவலர் எனப் பிரகடனப்படுத்தினார். மேலும் திருச்சபை முழுவதிலும், ஆண்டு தோறும் பங்குனி மாதம் 19ஆம் நாள் முதல் வகுப்பு பெருவிழாவாகக் கொண்டாடவும் கட்டளைக் கொடுத்தார். அதன்படி ஒவ்வொரு வருடமும், பங்கு 19ஆம் திகதியில் புனித வளனாரின் திருவிழாவைத் திருச்சபை கொண்டாடுகிறது.

**புனித சூசையப்பர் யாருக்கெல்லாம் பாதுகாவலர்**

- குருக்களின் பாதுகாவலர்
- குடும்பங்களுக்கு பாதுகாவலர்
- நோயுற்றோருக்கு பாதுகாவலர்
- தொழிலாளர்களின் பாதுகாவலர்
- நல் மரணத்துக்கு பாதுகாவலர்
- இளைஞர்களுக்கு பாதுகாவலர்
- ஏழைகளுக்கு பாதுகாவலர்
- துன்பத்தில் மூழ்கியவர்களுக்கு பாதுகாவலர்

## ஜெபம்



- ☆ இறைவனோடு மனித இதயம் பேசும் மொழிதான் செபம்” நேசிக்கும் ஒருவர் மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும் பாசம் தான் செபம்
- ☆ இனிமையான முகபாவனையை அமைத்துக் கொள்ள விரும்பினால் கண்ணாடிக்கு முன் ஒரு நிமிடம் ஆன்மாவிற்கு முன் ஐந்து நிமிடமும், கடவுளுக்கு முன் பதினைந்து நிமிடமும் செலவிடவும்
- ☆ நன்றியுணர்வோடு விண்ணை நோக்கி எழுப்பும் சாதாரண எண்ணம் தான் மிகச் சிறந்த செபம்
- ☆ செபமும், விசுவாசமும் ஆன்மாவின் ஊட்டச் சத்துக்கள். இவை இல்லாவிட்டால் மனிதனால் நலமுடன் வாழ முடியாது.
- ☆ இறைவனோடு நாம் ஏற்படுத்திக் கொள்ளும் நட்புதான் செபம்
- ☆ விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பாலம் தான் செபம், கடவுளிடமிருந்து நமது இதயத்தை திறக்கும் பாதை
- ☆ புறத்திலிருந்து அகத்திற்கு கூட்டிச் செல்லும் ஊக்கம்தான் செபம். இது நற்பண்புகளை வளர்க்கவும், ஆன்மாவுக்கு உயிர் கொடுத்து முழுமையும் தருகிறது

# புனிதர்களிடம் மகிமை அடைந்தவர்

**புனித அவிலா தெரேசா மறைவல்லுனர் (1552)**

“மகிமை நிறைந்த சூசையை எனது பாதுகாவலராகத் தெரிந்து கொண்டு அவரது பரிந்துரைக்காக என்னை முழுவதும் கையிளித்துவிட்டேன். இதன்மூலம் எனக்குத் தொல்லை கொடுத்து வந்த நோய் நீங்கலாயிற்று. இன்னும் பல பெரிய சிக்கல்களிலிருந்து விடுதலை அடைந்தேன். எனது மானம் காப்பாற்றப்பட்டது. எனது ஆன்மாவுக்குப் பாதுகாப்பு கிடைத்தது.அவரிடம் சில, பல பெரிய வரங்களை எப்படிக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவதென்ற திரிசங்கு நிலையிலிருந்த போது அவை அனைத்தையும் ஏன், அதற்கு மேலாகவே பெற்றுத் தந்தார். அவரிடம் இந்நாள்வரை எந்த ஒரு வரமும் கேட்டு, நான் அதைப் பெற்றுக்கொள்ளவில்லையென நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. நான் இந்த எமது பாதுகாவலர் புனித சூசையின் வழியாகப் பெற்றுக்கொண்ட வரங்கள் எனக்கு வரவிருந்த உடல், உள்ள ஆபத்துக்களை அவர் நீக்கிவைத்த விதம் இவற்றை நினைத்தால் உடல் புல்லரிக்கின்றது.

மற்ற புனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட நன்மை வரம் பெற்றுத் தருவதுபோல நான் நினைத்துக் கொள்வேன். புனித வளனாரை பொறுத்தமட்டில் அனைத்து வரங்களைப் பெற்றுத் தருபவராக உணருகிறேன். நமது நல்ல மேய்ப்பர், புனித சூசையின் பக்தர்களாகிய நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டுமென இயேசு விரும்புகிறார். தான் இவ்வுலகில் மனிதவதாரம் எடுத்து வளர்ப்புத் தந்தை சூசையுடன் வாழ்ந்த காலத்தில் எப்படி அவரது ஏவல்களை ஏற்றுப் பணிந்து நடந்துகொண்டாரோ, அவ்விதமே இப்போது வான்வீட்டில் அவர் நமதாண்டவரிடம் கேட்கும் வரங்கள் யாவற்றையும் பெற்றுத் தருகிறார் என்று குறிப்பிடுகின்றார்.

**புனித பிரான்சிஸ் சலேசியார் (1622)**

தான் எழுதிய ஆன்மீக நூல்களில் ஆங்காங்கே சூசையிடம் நாம் கொண்டிருக்க வேண்டிய சிறப்பான பக்தி முயற்சியைப் பரிந்துரைக்கின்றார். அவர் கூறும்போது முக்கியமாக கன்னிமை, தாழ்ச்சி, வீரம் தியாகம், விவேகம் ஆகிய பண்புகளைக் கோடிட்டுக் காட்டுகின்றார். மரியா ஒரு முகம் பார்க்கும் கண்ணாடிபோல தனது உள்ளத்திற்குள் நித்திய கதிரவன் இயேசுவின் ஒளிக்கற்றையை உள்ளத்திற்குள் வாங்கும் பேறுபெற்றவர். அதேபோன்று சூசையின் ஆன்மாவும் அத்தகைய கண்ணாடி போல முன்குறிப்பிட்ட விண்ணக ஒளிக்கற்றையை அடையும் பேறுபெற்றவர்.

“இவ்வுலக மன்னர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்விக் கண் திறந்துவிட, வழியில் போகும் ஏதோ ஒருவரையா தேர்ந்து கொள்வர்? ஆசிரியர்களிலேயே மிகுந்த தரம் வாய்ந்தவர்களையன்றோ தேர்வு செய்வர். அவ்வாறாயின் இறைவன் மனுவுரு எடுத்த தமது ஏக மகனாம் இயேசு கிறிஸ்துவுக்குக் கற்றத் தர தேர்ந்துகொண்ட சூசை எவ்வளவு பாராட்டுப் பெற்றவராகின்றார்? புனித சலேசியார் தனது பிரிவியரி புத்தகத்தில் ஒரே ஒரு படம் மட்டுமே வைத்திருப்பாராம். அதுதான் புனித வளனாரின் படம் அவரைத் தமது தந்தை எனவும், இதுவரை அவரிடம் கேட்ட வரங்களை கிடைக்காமற் போனதில்லை என்றும் கூறுகிறார்.

**ஆகவே புனித சூசையப்பரிடம் நாமும் எமது தேவைகளுக்காக மன்றாடி வரங்களைப் பெற்றுக்கொள்வோம். எமது பாதுகாவலராக புனித சூசை தந்தையை ஏற்றுக்கொள்வோம். திருக்குடும்பத்தை வழிநடத்தியதுபோல எம் குடும்பத்தையும் பாதுகாக்கும்படி மன்றாடுவோம்.**

## இறைவனில் இளைப்பாற்றி அடைந்தார்கள்



அருட்தந்தை ஜோ பர்னாந்து அடிகள்



அருட்தந்தை கப்ரியேல் நாணயக்கார (அ.ம.தி) அடிகள்



அருட்தந்தை லோரன்ஸ் (அ.ம.தி) அடிகள்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை ஜோ பர்னாந்து அடிகள் 24.02.2017 அன்று காலமானார்.

அருட்தந்தை கப்ரியேல் நாணக்கார அமதி அடிகள் 23.02.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அருட்தந்தை லோரன்ஸ் (அ.ம.தி) அடிகள் 28.02.2017 அன்று காலமானார்.

இவ் அருட்தந்தையர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா



10

## பணியால் கவரப்பட்டு பணிக்காகப் பலர்

தெரேசாவின் முதற் சீடர்கள் அக்னெஸ் (சுபாசினிதாஸ்), மதலேனா கோமஸ் (கெர்ட்ரூட்) ஆகிய இருவரும் முதற் சீடர்களும், உறுதுணையாக இருந்தவர்களும் என்பதால்தான் தெரேசாவுக்கு நோபல் பரிசு வழங்குவதற்கு ஆயத்தம் செய்தவேளை நோபல் பரிசுக் குழுவினர் தெரேசாவுடன் இவர்களையும் ஆஸ்லோவுக்கு அழைத்திருந்தனர். இனிமேல் தெரேசா தனித்து சேரிகளுக்குப் போகவேண்டிய அவசியமில்லை. சுபாசினிதாசும் மதலேனா கோமசும் அவருடன் செல்வார்கள். மூவரும் சேர்ந்து பாடங்களைக் கற்றுக்கொடுப்பர். மாலையில் மூவருமாக வீடு திரும்புவர்.

தெரேசாவின் சீடர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போனது. மதலேனா கோமசுக்குப் பின் சகோதரி டோரெத்தியும் அவருக்குப் பின் சகோதரி மார்க்ரெட் மேரியும் தெரேசாவுடன் சேர்ந்தனர். ஒரு சில மாதங்களில் அவர்களது எண்ணிக்கை பத்தாக உயர்ந்தது. பத்துப் பேருக்கு போதுமான வசதிகள் தெரேசாவின் அறையில் இல்லை. இதைக் கவனித்த மிக்கேல் கோமஸ் தமது வீட்டின் மூன்றாவது மாடியில் இருந்த பெரிய அறை ஒன்றை தெரேசாவுக்கு விட்டுக் கொடுத்தார். இந்த அறையிலிருந்து தான் தெரேசாவின் சகோதரிகள் இருவர் இருவராக கல்கத்தாவின் மூலை முடுக்குகட்கும் சந்து பொந்துகட்கும் சேவை செய்யச் செல்வார்கள்.

1949 ஆவணி 16ம் நாளுடன் தெரேசாவுக்கு அளிக்கப்பட்ட ஓராண்டு பரிசீலனைக் காலம் முடிவுற்றது. இனிமேல் அவர் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துதான் ஆகவேண்டும். ஒன்றில் அவர் தாம் தொடங்கிய புது வாழ்வு தமக்கு ஒத்துவராது என அதைத் துறந்து தாம் விட்டு வந்த லொரெட்டோ மடத்துக்குத் திரும்பவேண்டும். அன்றேல் தாம் தொடங்கிய புதுவாழ்வைத் தொடர்ந்து நடத்த கல்கத்தா பேராயருக்கு விண்ணப்பிக்க வேண்டும். எதைத் தேர்ந்தெடுப்பதற்கும் தெரேசாவுக்கு முழு சுதந்திரம் இருந்தது. அவரது விருப்பம் எது என அறிந்துகொள்ள கல்கத்தா பேராயரும் ஆவலாக இருந்தார்.

இளம்பெண்கள் ஒருவர்பின் ஒருவராக தெரேசாவின் குழுவில் சேர்ந்து கொண்டே இருந்தனர். அவர்களது எண்ணிக்கை இப்போது இருபதாக உயர்ந்தது. இதற்கிடையில் தெரேசாவுக்கு இந்தியக் குடியுரிமையும் கிடைத்தது. இனிமேல் அவர் இந்தியரோடு இந்தியராகப் பணிபுரிய எத்தடையும் இல்லை. தெரேசா தாம் தொடங்கிய பணியில் நிலைத்திருக்க விரும்புவதாக கல்கத்தா பேராயருக்குத் தெரிவித்தார். பேராயரும் தெரேசாவின் கன்னியர் குழுவை ஒரு துறவறச் சபையாக உயர்த்த வேண்டும் என எண்ணினார். அதற்கு உரோமையிலுள்ள விசுவாசப்பரப்புதல் குழுவின் அங்கீகாரம் பெறவேண்டும். எனவே, தெரேசா தமது சபையின் சட்டதிட்டங்களை எழுதிப் பேராயரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

தெரேசா முதலில் தமது சபையின் சட்டதிட்டங்களை எழுதி வான் எக்செம் அடிகளிடம் காட்டினார். அவரும் சில திருத்தங்களுடன் அவற்றைப் பேராயரிடம் சமர்ப்பித்தார். அவற்றின் ஐந்து நகல்களுடன் பேராயர் உரோமபுரிக்குப் பயணமானார். இச்சபையின் சட்ட திட்டங்களில் அது "அன்பின் மறைப்பணியாளர் சபை" என அறியப்படும் எனவும், இச்சபையினர் மற்ற துறவற சபையினரைப் போல கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் ஆகிய மூன்று வார்த்தைப்பாடுகளுடன் மிகவும் ஏழையராக இருப்பவர்களுக்கு முழுமனதுடன் இலவசத் தொண்டு புரிவோம் என நான்காவது வார்த்தைப்பாட்டையும் கொடுப்பார்கள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இச்சட்ட திட்டங்களை உரோமையிலுள்ள அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு அங்கீகாரத்தையும் வழங்கினார்கள். நான்காவது வார்த்தைப்பாடு மற்ற துறவற சபைகளின்று முற்றிலும் மாறுபட்டதாக இருந்தபோதிலும் அதையும் அங்கீகரித்தனர். இந்த நான்காலது வார்த்தைப்பாடு மகளீர் இச்சபையில் சேர்வதற்கு இடைஞ்சலாக இருக்குமே என சிலர் ஐயமுற்றனர். ஆனால், உண்மையில் அது தான் ஆர்வமுள்ள இளம்பெண்களை இச்சபையில் சேரத் தூண்டியது. அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு இளம் பெண்கள் உலகின் எட்டுத் திசைகளினின்றும் கல்கத்தாவுக்கு வந்து தெரேசாவின் சபையில் சேரத் தொடங்கினர். இச்சபை அங்கீகரிக்கப்பட்டு அது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட நாள் 1950 ஐப்பசி 7. இந்நாள் இச்சபையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொன்னாள். அன்று காலை கல்கத்தா பேராயர் மிக்கேல் கோமசின் வீட்டு மாடி அறைக்குச் சென்று அங்குள்ள சிறு கோவிலில் திருப்பலி நிறைவேற்றினார். திருப்பலியின் இறுதியில் வான் எக்செம் அடிகளார் சபையின் அங்கீகார பத்திரத்தை அங்கே கூடியிருந்த



சகோதரிகளுக்கும் மற்றோருக்கும் படித்துக் காட்டினார். அதில் எழுதப்பெற்றிருந்தது பின்வருமாறு: "இச்சபை அன்பின் மறைப்பணியாளர் சபை என அழைக்கப்படும். இதன் தலையாய நோக்கம் நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மிகவும் ஏழையானவர்கள், கைவிடப்பட்டோர், பிணியாளர், தொழுநோயாளர், இறக்கும் தருவாயிலுள்ளோர் ஆகியோர்க்கு இலவசப் பணிவிடை செய்வதாகும்" இதைப் படித்து முடித்ததும் அப்பத்திரத்திரை பேராயர் தெரேசாவின் கையில் கொடுத்தார். அந்த அங்கீகாரப் பத்திரத்தைப் பெற்ற போது தெரேசாவின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் உதிர்த்தது. அது ஆனந்தக் கண்ணீர். அவர் பல்லாண்டு காலமாக கண்டு கொண்டிருந்த கனவு அன்று நனவாகிவிட்டது. அவரை இனிமேல் அன்னை தெரேசா என்றே அழைப்போம்.


காளிகாட்டா. அதுதான் கல்கத்தாவின் பூர்வீகப் பெயர் என்பர் சிலர். இதை மறுப்போரும் உளர். கிழக்கிந்திய கம்பெனியைச் சேர்ந்த ஆங்கிலேயேப் பிரவு சார்னோக் என்பவர் முகலாயப் பேரரசர் ஔரங்கசீபிடமிருந்து விலைக்கு வாங்கின மூன்று சிற்றூர்களில் காளிகாட்டாவும் ஒன்று. கங்கையுடன் சங்கமமாகும் ஹுக்ளி நதியின் கரையில் அமைந்துள்ள இவ்விடத்தில் காளிதேவியின் கோவில்களை நாம் நிறைய பார்க்கலாம். கல்கத்தாவின் தென்பகுதியிலுள்ள தட்சினேசுவரம் காளிகோவிலில்தான் இராமகிருஷ்ன பரமஹம்சர் பூசாரியாகப் பணிபுரிந்து வந்தார். இக்கோவில்களுக்கெல்லாம் நடுநாயகமாக விளங்குவது காளிகாட் என்னுமிடத்திலுள்ள காளி கோவில். இக்கோவிலில் ஐப்பசி மாதத்தில் திருவிழா நடைபெறும். அவ்வமயம் ஆயிரக்கணக்கான காளிபக்கதர்கள் அங்கே கூடுவார்கள். இவர்கள் தங்குவதற்கென்று பெரிய மண்டபங்கள் பல அங்கே நிறுவப்பட்டுள்ளன. அவை தர்ம சாலைகள். திருவிழா சமயங்களில் மட்டும் இவற்றில் ஆட்கள் தங்கியிருப்பார்கள். மற்ற சமயங்களில் இவை ஆள்நடமாட்டமின்றிக் கிடக்கும். இப்பேர்ப்பட்ட தர்மசாலை ஒன்றினுள் நுழைகின்றோம். இது பல ஆண்டுகளாகப் பயனற்றுக் கிடந்ததுதான். ஆனால், இன்று அது நன்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அறிகுறியாக இதோ நுழைவாயிலில் ஓர் அறிவிப்புப் பலகை தொங்குகிறது. அதில் "நிர்மல் ஹிருதய்" என்று எழுதப்பட்டிருக்கிறது. உள்ளே நுழைந்துப் பார்த்தால் மருத்துவமனைகளில் காண்பதுபோல் உயரம் குறைந்த கட்டில்களில் மூன்று வரிசையாக அநேகம் பேர் படுத்திருக்கின்றனர். இவர்கள் அத்தனைபேரும் இறக்கும் தருவாயில் இருப்பவர்கள். அவர்களைக் கவனிப்பதற்கென்று வெண்ணிறச் சேலை அணிந்த சகோதரிகள் அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் எல்லோரும் அன்னை தெரேசாவின் சகோதரிகள். நேற்று கல்கத்தா மாநகரில் சாலை ஓரங்களில் கிடந்தவர்கள் இன்று இவ்விடுதியில் இடம் பெற்றிருக்கின்றனர். இதுதான் இறக்கும் தருவாயிலுள்ளோரின் நிர்மல ஹிருதய் விடுதி.

இது காளி கோவிலோடு ஒட்டியிருக்கிறதே. அது ஏன்? அன்னையிடம் கேட்போம். அவர் கூறுகின்றார்: "இது நிகழ்ந்தது 1948ம் ஆண்டில், நான் லொரெட்டோ கன்னியர் மடத்தை விட்டு வெளியே வந்த சமயம். சாலை ஓரமாக நடந்துவந்து கொண்டிருந்தேன். அப்போது அரசு மருத்துவமனைக்கு எதிரில் சாலை ஓரமாக ஓர் அம்மா அநாதையாகப் படுத்துக் கிடப்பதைக் கவனித்தேன். பக்கத்தில் சென்று பார்த்தபோது உடல் முழுவதும் எறும்புகளும், ஈக்களும் மொய்த்துக் கொண்டிருந்தன. கால்விரல்களை எலிகள் பதம் பார்த்திருந்தன. ஆனால் உடலில் உயிர் இன்னும் ஒட்டிக் கொண்டு தான் இருந்தது. அவள் அனாதையாக அங்கே இறந்துவிடக் கூடாதே என்று அவளையும் தூக்குக் கொண்டு எதிரிலிருந்த மருத்துவமனைக்கு ஓடினேன். ஆனால் மருத்துவமனை அதிகாரிகள் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். நானும் விட்டுக் கொடுக்கவில்லை. "நீங்கள் இவளை எடுக்கும்வரை நான் இவ்விடத்தைவிட்டு நகரமாட்டேன்" என்று ஒற்றைக் காலில் நின்றேன். இறுதியில் என் பிடிவாதம் வென்றது. அந்த அம்மா உயிர் பிழைத்துக் கொண்டாள். அதன்பின் அவளைப்போல எத்தனையோ அநாதைகள் சாக்கடையில் கிடப்பதைக் கவனித்திருக்கிறேன். அவர்களையும் தூக்கிக் கொண்டு எத்தனை மருத்துவமனைகளுக்கச் சென்று கெஞ்சியிருக்கின்றேன்! சில சமயங்களில் அவர்களை வாடகை வண்டிகளில் ஏற்றிச் சென்றிருக்கின்றேன். வாடகை வண்டிக்காரர்கள் மறுத்தபோது ரிக்ஷா வண்டிகளில் ஏற்றிச் சென்றிருக்கின்றேன். ஆனால் மருத்துவமனைகளில் நான் அடைந்தது பெரும் ஏமாற்றமே. இவர்கள் தெருக்களிலும் சாக்கடைகளிலும் விலங்குகளைப் போல் சாகக்கூடாதே என எண்ணினேன். மோட்டி ஜீலில் குடிசை ஒன்றை வாடகைக்கு எடுத்து அதில் அவர்களைத் தங்கவைத்தேன்"

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

# கற்களை தொந்தரவு செய்யாதீர்கள்




ஆப்பிரிக்காவில் "குலுஸ்" என்கிற ஒரு பழங்குடி இனத்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் காட்டில் உள்ள சுருள்வால் குரங்குகளைப் பிடித்து, அமெரிக்காவின் மிருகக்காட்சி சாலைகளுக்கு அனுப்புவது வழக்கம். அதை ஒரு தொழிலாகச் செய்தார்கள்.

இந்தச் சுருள்வால் குரங்குகளைப் பிடிப்பது அத்தனை லேசு கிடையாது. பயங்கர கில்லாடிகள் அவை. நூறு பேர் வந்து கூட்டம் கட்டினாலும் எல்லாருக்கும் "டெம்பே" காட்டி விட்டு ஓடிவிடும். நிறைய வெள்ளைக்காரர்கள் வந்து பிடிக்க முயன்று தோல்வி அடைந்திருந்திருக்கிறார்கள். ஆனால், அந்த மண்ணின் பூர்வ குலுஸ் மக்கள் சுருள்வால் குரங்குகளை மிக எளிதாகப் பிடித்துவிடுவார்கள். அதற்கென்று அவர்களிடம் ஒரு பிரத்யேக டெக்னிக் இருந்தது. ரொம்ப சிம்பிள் அது. அந்த இன குரங்குகளுக்கு பருப்புகள் என்றால் ரொம்ப இஷ்டம். குலுஸ் மக்கள் என்ன செய்வார்கள் என்றால், மரத்தில் குரங்குகளின் கை மட்டும் நுழையக்கூடிய அளவிற்கு வாயுள்ள ஒரு சிறிய பொந்து செய்து அதில் நிறைய பருப்பு வகைகளைப் போட்டு வைப்பார்கள். பருப்பு இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து சுருள்வால் குரங்கு அங்கு வரும். தன் கையைக் குவித்து பொந்துக்குள் கையை விட்டு, பருப்புகளை அள்ளும். கை நிறைய பருப்புகளை அள்ளினதும், குரங்கின் கை என்னவாகும்? பெரிதாகிவிடும் அல்லவா?

இப்போது குரங்கால் பொந்திலிருந்து கையை எடுக்க முடியாது சிரமப்படும். குரங்கு தன் கையிலிருக்கும் பருப்புகளை கீழே போட்டுவிட்டால் அதனால் கையை எடுத்துவிட முடியும். ஆனால் முட்டாள் சுருள்வால் குரங்கிற்கு பருப்புகளை கீழே போட மனசு வராது. இப்படிப் பருப்புகளையும் கீழே போடாமல், கையையும் வெளியே எடுக்க முடியாமல் சுருள்வால் குரங்கு அல்லாடிக் கொண்டிருக்கும்போது நம் குலுஸ் ஆட்கள் பின்னாலே வந்து ஒரு வலையைப் போட்டு, குரங்கைப் அமுக்கிப் பிடித்து விடுவார்கள். காட்டில் சுதந்திரமாகத் திரிய வேண்டிய சுருள்வால் குரங்கு சில பருப்புகளை இழக்க மனசில்லாததால், காலத்திற்கும் ஒரு சிறிய கூண்டின் கம்பிகளுக்குப் பின்னால் நின்று மக்களுக்கு வேடிக்கைக் காட்டிக் கொண்டிருக்கும். பிரபல ஆங்கில எழுத்தாளர் ஆஸ்கர் வைல்டு ஒருமுறை நகைச்சுவையாக இப்படிச் சொன்னார். 'The best way to overcome a temptation is to yield to it" ஆனால் நமக்கு அது சரிப்படாது. சுருள்வால் குரங்குகளுக்கு நேர்ந்ததுதான் நடக்கும். சோதனைகளை வெல்வதற்கு தவக்காலத்தின் முதல் ஞாயிறு ஓர் அருமையான உத்தியைச் சொல்கிறது... கைகளை விரித்து சிலவற்றை உதறித்தள்ளுங்கள். இறுகப் பற்றிக் கொண்டு நிற்காதீர்கள். 'Just let it go!' இயேசு அதைத்தான் செய்தார். மத்தேயு 4:1-11 பகுதியை உன்னிப்பாக வாசித்துப்பாருங்கள். அங்கே சாத்தான் இயேசுவுக்கு ஒரு விஸ்தார சோதனை வலை விரித்து, அதில் மூன்று பருப்புக்களை பொறியாக வைக்கிறான்.

### ஒன்று: சொகுசு வாழ்க்கை

(இந்த கற்களை அப்பமாக்கி சாப்பிடுங்களேன்! ஏன் இப்படிச் சாப்பிடாமல் கொள்ளாமல் கஷ்டப்படுகிறீர்கள்? என்ன செஞ்சி என்ன ஆகப்போவுது? முதலில் உங்கள் வசதியைப் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்க நல்லா இருந்தாதானே நாலு பேருக்கு நல்லது செய்ய முடியும்? சாப்பிடுங்க (Take id Eary)\

### இரண்டாவது : புகழ்!


இந்த உச்சியிலிருந்து குதியுங்கள். எப்படியும் உங்களுக்கு ஒண்ணும் ஆகாது. உங்கள் வானதூதர்கள் உங்களைத் தாங்கிடுவாங்க ஆனா, அதுக்கப்பறம் பாருங்கள் ஊரில் எல்லோரும் உங்களைப் பத்தித்தான் பேசுவானுங்க. நீங்கதான் Talk of the town ஆக இருப்பீங்கள். உங்க பாப்புலாரிட்டி கிரா.ஃப் எங்கேயோ போய்விடும்!)

### மூன்றாவது : பதவி !

(என்னை மட்டும் கொஞ்சம் அனுசரிச்சுப் போனீங்கன்னா, உங்கள் இந்த ஒட்டுமொத்த உலகத்துக்கே பிரைம் மினிஸ்டர் ஆக்கிடுவேன். நான் நல்லவங்க என்னை நம்புங்க. உங்களை கோபுரத்துல வச்சி அழகு பார்க்க ஆசைப்படுறேன். ஏன் இப்படி முரண்டு பிடிக்கிறீங்க? வாங்க, வந்து என் கால்ல விழுங்க!")

மூன்றில் ஏதேனும் ஒரு பருப்பை இயேசு பற்றியிருந்தாலும் கூட சாத்தான் அன்றைக்கு வென்றிருப்பான். ஆனால் இயேசு சும்மாவா? "He conquered Satan by letting al the three go" "உன் சொகுசு எனக்குத் தேவை இல்லை உன் புகழ் எனக்குத் தேவையில்லை. எனக்கு என் அப்பா போதும்" என்றார் இயேசு. அதனால் அவர் வென்றார்.

**இயேசு பாலைவனத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டது மூன்று ஒத்தமைவு நற்செய்திகளிலும் குறிப்பிடப்படும் ஒரு முக்கிய நிகழ்வு. நாம் எப்படி எமக்கு சோதனைகளை வெல்ல முடியுமா?**




# "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்

இஸ்ராயேல் மக்களின் அரசனாக இறைவனே இருந்தார். ஆனால் சாமுவேலிடம் தமக்கு ஒரு அரசன் வேண்டுமென்று கேட்டனர். அதற்குச் சாமுவேல் மனித அரசனுக்கு வல்லமை கிடைத்தால் என்ன செய்வார் என்பதை 1 சாமுவேல் 8:6-18 வரையுள்ள பகுதியில் வாசிக்கிறோம்.

பிரெஞ்சுப் புரட்சியின் பின் அரசு மக்களின் உரிமைகள் எல்லாவற்றையும் தமது கையில் எடுக்கமுயன்றது. மதத்தை ஒருபக்கம் இருக்குமாறு கூறியது. அதாவது கல்வி போன்ற சகல சேவைகளையும் திருச்சபையிலிருந்து எடுத்து அரசே செய்துவந்தது. 1925ல் புனித பியுஸ் பாப்பரசர் எமக்கே கிறிஸ்துவின் மூலம் மனித உரிமைகள் எல்லாம் கிடைக்கின்றது என்று கிறிஸ்து அரசர் என்ற சிந்தனையை உருவாக்கினார்.

உண்மையில் பெரிய வெள்ளியன்று முள்முடி தரித்தவாறு இரு கரங்களையும் விரித்துக் கொடுத்து ஆணியறைய இடமளித்தார் இயேசுநாதர். சிலுவையைச் சிங்காசனமாக்கினார். அங்கு இறப்பும், உயிர்ப்பும், விண்ணேற்றமும் ஒரேகணத்தில் நடந்தன. ஆனால் நாம் இன்று மூன்றையும் மூன்றாகப் பார்க்கிறோம். சிலுவையிலேயே இயேசுவின் அரசநிலை வெளிப்பட்டது. அது தூய ஆவியானவர் மூலம் தொடங்கியது. இயேசுநாதர் சிலுவையின் அரசராகியது தமது வல்லமையை வெளிப்படுத்தவல்ல.

1 சாமுவேலில் வெளிப்படுத்தப்பட்டதை மீண்டும் ஞாபகப்படுத்துவோம். அன்று அரசனை நியமிப்பதை இறைவன் விரும்பவில்லை. அரசன் வேண்டுமென்று மக்களே விரும்பினர். இறைவன் அதற்கு இடமளித்தார். இருப்பினும் உங்களுக்கு நானே அரசன் என்றார். நியமிக்கப்படும் அரசன் என்னைப் போன்று மக்களைப் பாதுகாக்கவேண்டும். மக்களுக்காகச் சேவை செய்ய ஆயத்தமாக வேண்டும்.

இறைவன் சர்வதிகாரமுள்ள தலைவராகச் செயற்படவில்லை. அந்நியோன்னிய கீழ்ப்படிதலுடன் செயற்பட்டார். அதாவது சிறந்த தலைமைத்துவத்தில் கலந்துரையாடலும் கீழ்ப்படிதலும் இருக்கும்.இரு பக்கமும் கீழ்ப்படிதலும் இருக்கும். அவ்வாறுதான் இறைவன் எம்மை நிர்வகிக்கிறார். நாம் எமது குடும்பத்தில் சங்கத்தில் திருச்சபையில் நாட்டில் எப்படிப்பட்ட தலைவர்களாகச் செயற்படுகிறோம்? சர்வதிகாரத்துடனா? அல்லது அந்நியோன்னிய கீழ்ப்படிதலுடனா? உண்மையான தலைவன் மக்களின் ஆயனாக இருப்பான். எப்போதும் இறைவன் எமக்கு முன்னே செல்கிறார். அப்படியே நல்ல ஆயனும் இருப்பான். இதுவே சிறந்த தலைமைத்துவம் ஆகும். மக்களுக்காக இறப்பதற்கும் துணிபவனே சிறந்த தலைவனாவான்......



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

133

தொடர்ச்சி 15ம் பக்கம்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



# இறைவார்த்தை வழிபாடு

WLX

- பேதுரு -

## தவக்காலத்தில் முதல் வாரம் 05.03.2017)

**வாசக விளக்கம்:** இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் சோதனையை சந்திக்க வேண்டும் என்பது இயற்கை, இந்த சோதனை ஒருவருடைய வாழ்வில் எழுச்சியையும், இன்னொருவனுடைய வாழ்வில் வீழ்ச்சியையும் கொண்டு வருகின்றது. சோதனை இல்லா வாழ்வு உண்டா? தவக்காலத்தின் முதல் வாரத்தில் கால்பதிக்கும் நமக்கு சோதனைகளை எவ்வாறு வெல்ல வேண்டும் என்ற கேள்விகளுக்கு இன்றைய வழிபாடு பதில் தருகின்றது. இறைமகன் இயேசு சோதிக்கப்பட்டார். ஆனால் சோதனைக்கு அடிமையாகவில்லை. மாறாக ஒரு மனிதனாக சோதனையை வெற்றிக் கொண்டார். பசியா? கடவுளா?, செல்வமா? உலகமா?, பதவியா? அதிகாரமா? என்ற சோதனை வலையில் இயேசு விழுந்து விடவில்லை. மாறாக இறைவார்த்தையும், ஆவியானவரின் வழிநடத்தலையும் கொண்டு சோதனைகளை வெற்றிக் கொண்டார். அதுபோலவே நாமும் நமது வாழ்வினில் வரும் சோதனைகளை வெற்றி கொள்ள இறைவார்த்தையை அறிந்து கொள்வதிலும் ஆவியானவரின் வழிநடத்தலைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். மனமாற்றத்தின் காலத்தை தெடங்கியுள்ள நாம் இடைவிடா செபத்தின் வழியாகவும் நீங்காத இறை நம்பிக்கையோடும் வாழ்ந்து சோதனைகளை சாதனைகளாக மாற்றும் வரம் வேண்டி பலியில் பங்குகொள்வோமாக.

**முதல் வாசகம் : தொ.நூ 2:7-9, 3:1-7**
முதல் பெற்றோரைப் படைத்ததும் அவர்களின் பாவமும்.

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவரே இரக்கமாயிரும் ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்

**இரண்டாம் வாசகம் : உரோ 5:12-19**
பாவம் பெருகிய இடத்தில் அருள் அணை கடந்து பெருக்கெடுத்தது

**நற்செய்திக்கு முன் வசனம் :**
மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்.

**நற்செய்தி வாசகம் : மத் 4:1-11**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைநம்பிக்கையின் ஊடாக சோதனைகளை வெற்றி கொள்ள இறைமக்களுக்கு வழிகாட்டும் தூய திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அகிய அனைவரும் இத்தவக்காலத்தில் மக்களின் மனமாற்றத்திற்காக அதிகமாய் உழைத்திட வரமருள வேண்டுமென்று...

எமது நாட்டை நேசிப்போரும், நாட்டிற்காக உழைப்போரும் தமது மனமாற்றத்தின் ஊடாக மக்களுக்கு வழிகாட்டவும், அசாதாரண நிலைகளை அகற்றி சாதாரண நிலையில் அனைவரும் வாழ்ந்திட தமது சொல்லாலும், செயலாலும் வழிகாட்டிகளாகத் திகழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

தவறு செய்வதும், சோதனைக்குள்ளாவதும் மனித இயல்பு. என்றாலும் இயேசுவைப்போல் சோதனைக்கு உட்பட்டாலும் பாவத்தில் விழாமல் வாழவும், இறைவார்த்தையின் மீதும், செபத்தின் மீதும் நம்பிக்கைக் கொண்டவர்களாக இத்தவக்காலத்தில் செப தவ, தானதர்மங்களில் ஈடுபட்டு வாழ வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று....

## தவக்காலத்தின் இரண்டாவது ஞாயிறு 12.03.2017)

**வாசக விளக்கம்:** மனமாற்றத்தின் காலமான தவக்காலத்தின் இரண்டாவது ஞாயிறு தின வழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் இறை உறவுகளே இன்றைய உருமாற்ற நிகழ்வின் ஊடாக இயேசு இன்னுமொரு சோதனையை சந்திக்கிறார். சாத்தானுக்கு சொன்ன அதேவார்த்தையை தன் நண்பன் பேதுருவுக்கும் சொல்லுகின்றார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற வந்த மைந்தன் இயேசு தனது இலட்சிய வாழ்வை சோதிப்போரை "போ பின்னாலே சாத்தானே" எனக் கடிந்து கொள்கிறார். மனிதர் ஒவ்வொருவருக்கும் உருமாற்றம் அவசிய -மானது. அதிலும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு உருமாற்றத்தோடு கூடிய மனமாற்றமும் அவசியம். இயேசுவிடம் கடவுள் தன்மையும் மனிதர் தன்மையும் சமமாய் இருக்கிறது. தன்வாழ்வில் ஒரு சராசரி மனிதனாக இன்ப, துன்பங்கள், சோதனை, வேதனைகள், விருப்பு, வெறுப்புக்கள் என அனைத்தையும் எதிர் கொண்டார். மனக்குழப்பத்தில் செபத்தில் தந்தையிடம் உறவாடுகின்றார். இதன் பயனாக தன் இலட்சிய பயணத்தில் தெளிவாகிறார். தந்தை கடவுள் இயேசுவின் வாழ்வில் பூரிப்பும் மகிழ்ச்சியும் அடைகின்றார். எமது வாழ்வின் பொருட்டு கடவுள் பூரிப்பு அடைவாரா? சிந்திப்போம் செயல்படுவோம் நாமும் உருமாறுவோம் பிறரையும் உருமாற்றுவோம். இதற்காக இறைவனிடம் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : தொ.நூ 12:1-4**
இறைமக்களுக்கு தந்தையாகிய ஆபிராம் அழைக்கப் பெறுதல்

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக

**இரண்டாம் வாசகம் : 2 திமோ 1:8-10**
இறைவன் நம்மை அழைத்து நம்மீது ஒளி வீசுகிறார்

**நற்செய்திக்கு முன் வசனம் :**
ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொளி கேட்டது. "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்"

**நற்செய்தி வாசகம் : மத் 17:1-9**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தவக்காலத்தின் ஊடாக நிலைவாழ்வை நோக்கித் தன் மக்களை வழிநடத்திச் செல்லும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து வழிநடத்திக் கத்தருள வேண்டுமென்று...

நாட்டின் தலைவர்களும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் பிறர் நலப் பணியில் ஈடுபடும் போது வருகின்ற துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு தமது உண்மையான சேவை மன்பான்மையை வெளிப்படுத்தி மக்கள் மனங்களை வென்று பணியாற்றிட வேண்டிய வரங்களையும் பொழிந்தருள வேண்டுமென்று...

இயேசுவைப் பின் செல்லும் மக்களாகிய நாம் எமது வாழ்வில் நேரிடும் துன்ப துயரங்கள் சோதனைகள், எமது இலட்சிய வாழ்வை திசைமாற்றிவிடும் என்பதை உணர்ந்தவர்களாக எமது இலட்சியங்களில் உறுதியுடன் செயல்படவும், எமமையே நாம் சுய ஆய்வு செய்து எமது பழைய வாழ்வில் இருந்து உருமாறி புதுவாழ்வைப் பெற்றிட வரமருள வேண்டுமென்று...

## தவக்காலம் தவக்காலம்

*தவக்காலம் தவக்காலம்*
தனி மனித வாழ்வை சீர்த்தூக்கிப்பார்க்க,
சந்தர்ப்பம் வழங்கும் இனிய காலம்
*தவக்காலம் தவக்காலம்*
தந்தை தன் மைந்தன் இயேசுவை
தானம் செய்ததை நினைவூட்டும் காலம்

காலங்களில் சிறந்த காலம் வசந்தகாலம்
காலங்களில் உகந்த காலம் ***தவக்காலம்***
காலங்களில் பொற்காகலம் ***தவக்காலம்***
கருணைத் தேவன் கருணையை அள்ளி
வழங்குவது ***தவக்காலம்***

***தவக்காலம்*** தனிதமனிதனை
மனம் திரும்ப அழைக்கின்றது
***தவக்காலம்*** அருள் வழங்கும்
அருளின் காலம்
***தவக்காலம்*** மனித வாழ்வை
சிந்திக்கத் தூண்டும் காலம்
***தவக்காலம்*** தனி மனித வாழ்வை
சீர்த்தூக்கிப் பார்க்க அழைப்பு
விடுக்கும் காலம்

தந்தையாம் இறைவன் தன் மைந்தனை
தரணிக்கு ஈந்து தாரை வார்த்து
தனி மனிதன் புதுமனிதனாக
புதுபடைப்பு பெற தவவாழ்வை அருளி
தன்னையே உள்நோக்க
தருணம் தரும் காலம்

இறைவார்த்தையில் ஈடுகொண்டு
அருளினால் ஆட்கொள்ளப்பட்டு இன்னும்
பல தவமுயற்சிகளில் ஈடுபட அழைத்து
இறைவன்பால் எம்மவரை இட்டுச் சென்று
இகமெல்லாம் புனிதப்படுத்த
அழைக்கும் காலம்

ஆன்மீக செயற்பாடுகளில் ஆழமாக ஈடுபட
அன்பராம் இயேசு பெருமானின்
பாடுகளை தியானித்து
ஆத்தும சரீர வாதைகளை
அவருக்காக அனுபவித்து
ஆண்டவராம் இயேசுவின் பாதையை
பின்பற்றும் காலம்

சிலுவைப்பாதையை நோக்கி பயணம் செய்ய
சிந்தனைகளை சீர்த்தூக்கிப் பார்க்க
தூண்டிவிட
சிறுபான்மை, பெரும்பான்மை சீராக்கப்பட
சிலுவைப்பயணம் அழைக்கும் காலம்

இயேசு சென்ற துன்ப துயர வழிப்பாதையில்
நேசர்கள் நாமும் பின்தொடர்ந்து நடந்திட
தாசர்கள் அனைவரும்
அவர் வழி பின் தொடர
புண்ணிய பாதையை நோக்கி
போக வைக்கும் காலம்

பண்பட்ட உள்ளமாய்
நம் உள்ளம் மாற்றப்பட
பாவங்களை களைத்தெறிய வரம் வேண்டிட
புனித பாதையில் நடைப்பயணம் சென்றிட
புண்ணியங்கள் பல புரிந்து புதுவாழ்வு
பெறவைக்கும் காலம்


கோடிப்பாவம் புரிந்த மனிதம்
மாசற்றதாய் மாறிட
தேடி அணைக்கும் தெய்வத்தால் மாண்புபெற
வாடும் உள்ளங்களை
வாழ்வு பெற அழைக்க
வாழ வைக்கும் தெய்வம்
வரம் பல ஈந்திட வரம்வேண்டும் காலம்

தவம் புரிந்து தன்னலம் துறந்து,
தாழ்மையுடன் தாட்பணிந்து
மன்னிப்புப் பெற்றிட தாழ் பணிந்து
இறைவரம் கேட்டு
தன்னையே தடம்புரண்டு மாற்றம் கண்டிட
அழைப்பு விடுக்கும் காலம்

மதிப்பீடுகளை மறுவியெடுக்க, மரபுகள்
மறுபரிசீலனை பெற
மனிதனின் மறுபக்கம் புரட்டிப்பார்க்க மனிதம்
முக்கியத்துவம் அடைய
மக்கள் மனம் மறுமலர்ச்சியடைய
மாந்தர்கள், அனைவரும் புதுவாழ்வு பெற
மன்னன் இயேசுவின் பாதச் சுவட்டில்
தடம் பதிக்க அழைக்கும் காலம்

அன்பில் உருவாகி அன்பினால் உணர்வாகி
அன்பால் புத்துலகம் படைத்திட
அகிலமும் புத்துயிர் பெற்று,
குடும்பமும் கூடி வாழ
அர்ப்பண வாழ்வை ஆழப்படுத்த
அழைக்கும் காலம்

நிலையில்லா இவ்வுலகிலே நிலைவாழ்விற்கு
எம்மை இட்டுச் செல்ல
நிறைவாழ்வை நோக்கி நிமிர்ந்து நாம்
நடைபோட
நித்தியமும் நேர்வழியில் நடக்க
நம்மை தூண்டிட
நேசராம் இயேசு பாதம் சரணடைந்து வாழ
அழைக்கும் காலம்




ஆக்கம்
அருட்சகோதரி
டெலா றோஸ் அகா.

# இலங்கையின் திருத்தூதரான

## புனித யோசேவ்வாஸின் தூய வாழ்வும் இலங்கை வருகையும்




### 1.8 யோசேவ்வாஸ் அடிகள் இலங்கையில் பணியாற்றத் திட்டம்

31 தை 1684இல் பேராயர் மரணமடைந்தமையினால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யோசேவ்வாஸ் அடிகள் கன்னடத்தை விட்டு வெளியேறினார். கன்னடத்தில் பணிசெய்த இந்த மூன்று ஆண்டுகளிலும் யோசேவ்வாஸ் அடிகளார் இலங்கை செல்லும் எண்ணத்தை ஒருபோதும் கைவிடவில்லை. கோவையிலிருக்கும்போது இலங்கைக்குள் செல்வது கஷ்டமாகத் தோன்றினாலும் இப்பொழுது அயலிலிருந்து பார்க்கும்போது முற்றும் இயலாத காரியமாகத் தோன்றவில்லை. இலங்கை வாழ் கிறிஸ்தவர்கள் படும் அல்லல்களைப் பற்றி அறியக்கூடிய சந்தர்ப்பம் அடிக்கடி அவருக்கு மங்களூரில் கிடைத்தது. நீண்ட காலமாகத் துன்பத்தை அனுபவிக்கும் தீவுக்குள் புகுந்து அங்குள்ள மக்களுக்கு உதவி செய்யுமுகமாக தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார் யோசேவ்வாஸ் அடிகளார். இலங்கைக்குச் செல்லும்படி தனது மனதில் இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கும் குரலொலிக்குச் செவிமடுத்த யோசேவ்வாஸ் அடிகளார் பேராயரினதும், அப்போஸ்தலிக்க பதில் ஆயரினதும் மரணத்தின் பின் கோவை மறைமாவட்டப் பரிபாலகரிடம் தான் கன்னடத்தைவிட்டு நீங்குவதற்கு உத்தரவு கேட்டு, எவ்வித தடையுமின்றிப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை விசுவாசிகளை முனிவர் மறக்கவில்லை. மங்களூர், வாசலூர் போன்றவை இலங்கை ஒல்லாந்த அதிகாரிகளுக்குச் சேர்ந்தவை. அங்கு ஒல்லாந்தருடைய கப்பல்கள் வியாபரத்துக்கு வருவதுண்டு. மலிவு வேலை செய்ய அடிமைகளை வாங்கிப் போவதுண்டு. இலங்கையிலுள்ள நிலவரங்களை அறிய இங்கு அதிக வசதியிருந்தது. அதன்மூலம் முன்னர் கோவையிலிருக்கும்போது குருக்கள் இலங்கையுட் புகுவது கடினடிமனத் தோன்றினால் இப்போது அது இயலாத காரியமல்ல எனக் கண்டார். இரு வழிகளை ஆராய்ந்தார். தரைமார்க்கமாகத் தூத்துக்குடி மட்டும் இரகசியமாகப் போய் அங்கிருந்து கொழும்புக்கு தாவுவது ஒன்று. மற்றது இன்னும் சுலபமானது. இது பற்றிக் கம்போயா சுவாமியுடன் கலந்தாலோசித்தார். அவரோ உடன்படவில்லை. எனவே கோவைக்குத் திரும்புவதென முடிவு செய்தார். துணைவனான மருமகன் கார்வாலோவும் குருத்துவ கல்லூரியிற் சேர்வதற்குக் காலமாகிவிட்டது. தமது மறைக்கோட்ட முதல்வர் பணியைத் துறந்து, திருத்தூது ஆளுநரின் வதிவிடத்தையடைந்தார். திருத்தூது ஆளுநரான ஆயர் கஸ்ரோ மங்களூரில் இல்லாமையால் ஆயரின் குருமுதல்வரைக் கண்டு அவரின் காலடியில் வீழ்ந்து, தமது கோவை ஆயரின் திரு ஆட்சி அதிகாரத்தை ஏற்றதன் வழியாக தங்களுக்குத் தவறு இழைத்திருப்பின் மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார். தாம் இப்போது மறைக்கோட்ட முதல்வராக வரவில்லையெனவும், யோசேவ்வாஸ் அடிகள் எனும் நிலையில் மட்டுமே வந்ததாகவும் கூறி, தனக்கு யாதேனும் கண்டனம் விதித்திருந்தால் மன்னிக்கும் படியும் தயவாக வேண்டிக் கொண்டார். இம் மன்னிப்பு பகிரங்கமாக இடம் பெறவேண்டும் என்பதில் கருத்தாயிருந்தார். யோசேவ்வாஸ் அடிகள் வேண்டிக் கொண்டபடி பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருப்பின் அது திருத்தூது ஆளுநர் பகுதியினருக்கு பெரும் வெற்றியாக அமைந்திருக்கும். எனினும் குருமுதல்வர் தம் பகுதியினருக்கும் இச்சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்தாது யோசேவ்வாஸ் அடிகளை கௌரவமாக நடத்தினர்.

### 1.8.1 ஒரற்றோரியன் சபையை நிறுவுதல்

யோசேவ்வாஸ் அடிகளார் கோவை திரும்பியதும் தான் மறைவட்டாரக் குருமுதல்வராகவும், கன்னடத் மறைமாவட்டத் தலைவராகவுமிருந்து ஆற்றிய பணிகள் பற்றி மறைமாவட்டப் பரிபாலகருக்கு விபரித்தார்62. கோவையில் திரு ஆட்சி தொடர்பான பிரச்சினைக்கு யோசேவ்வாஸ் அடிகள் கையாண்ட தீர்வும், அவர் அங்கு தமது பணியை இடை நிறுத்திய விதமும் கோவா அவையின் பெரும் அதிருப்தியை அவர் பெற்றுக் கொள்ள காரணமாயிருந்தது. இதனால் அவர் கோவா திரும்பிய போது அவருக்கு வெதுவெதுப்பான வரவேற்பே கிடைத்தது.

ஆன்மாக்களை மீட்பதில் இவருக்கிருந்த அதீதி ஆர்வம், கடின உழைப்பு, மக்கள் மத்தியிலிருந்த பெருமதிப்பு இவற்றின் மத்தியிலும் கோவா அவை இவருக்கு எவ்வித பங்குப் பணியையோ, குருத்துவப் பணிப் பொறுப்புக்களையோ வழங்கவில்லை. அவரும் கோவாவில் எந்தவித பங்குப் பணியையும் ஏற்பதில் ஆர்வம் காட்டவில்லை. அத்துடன் இலங்கைக்குச் செல்வது பற்றிய திட்டத்தை வெளிப்படுத்தவுமில்லை. கன்னட நாட்டிற்குச் செல்வதற்கு முன்பு இருந்தது போன்றே மறையுரை ஆற்றுவதற்கும், பாவமன்னிப்பு அருட்சாதனத்தை வழங்குவதற்கும் மட்டும் அதிகாரமுள்ளவராக விளங்கினார். இவர் தன்னுடைய குடும்பத்தையும் போய் சந்திக்கவில்லை. இவருடைய குடும்பத்தில் கிறிஸ்தோப்பர் வாஸின் நான்கு பேரப்பிள்ளைகளில் இருவர் சிறுவயதில் இறந்துவிடவே மற்ற இருவரும் குருத்துவ வாழ்வைத் தெரிந்து கொண்டிருந்தனர். எனவே, எதிர்காலத்தில் வாஸ் என்னும் குடும்பப் பெயரைத் தாங்குவதற்கு எவரும் இருக்கவில்லை.

### 1.8.2 தியான போதனையில் யோசேவ்வாஸ் அடிகளின் பங்களிப்பு

யோசேவ்வாஸ் அடிகள் இலங்கைக்கான தமது பயணம் பற்றித் திட்டமிட்டுக் கொண்டிருந்த வேளையில் “வரந்தோயா” துறவிகள் மடத்திலிருந்து மனுவல் டாஸ் என்ராடாஸ், ஜோய்ச் டாஸ் சாய்டஸ் என்னும் குருக்கள் தியானம் போதிப்பதற்கு கோவா நகருக்கு வந்திருந்தனர். இவர்கள் போர்த்துக்கேய மொழியில் மட்டுமே மறையுரையாற்றக் கூடியவர்கள். கோவா நகரில் இருந்த அநேகரால் போர்த்துக்கேய மொழியை விளங்கிக்கொள்ளவும், பேசவும் கணிசமான அறிவு பெற்றிருக்கவில்லை. ஆனால் போர்த்துக்கேய மொழி தெரிந்த நகர்ப்புற மக்கள் மட்டும் தங்கள் மறையுரைகளைக் கேட்பதால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாதென்பதை இவர்கள் உணர்ந்தனர். இதனால் தங்கள் மறையுண்மைகளை சுதேச மக்களுக்கு மொழிபெயர்க்கும் பணியை மேற்கொள்ள ஒரு குருவின் உதவி தேவை என்பதை உணர்ந்த இவர்கள் யோசேவ்வாஸ் அடிகளின் உதவியை நாடினார்கள்.

பல குருக்களுக்கு பொறுப்பாயிருந்து, மறைக்கோட்ட முதல்வராகப் பணியாற்றிய போதும் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றும் எளிய பொறுப்பினை ஏற்றுக் கொள்ள யோசேவ்வாஸ் அடிகளார் முன்வந்தார். போர்த்துக்கேய குருமாரும் யோசேவ்வாஸ் அடிகளின் ஆன்மீக ஆர்வம் மற்றும் அவரிடம் விளங்கிய உயர்ந்த பண்புகள் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். யோசேவ்வாஸ் அடிகளும் பிறர் மூலமாக இறைவனின் வழிகாட்டலை அறியும் பண்பையும் தாழ்ச்சியையும் கொண்டிருந்தார். போர்த்துக்கேய குருக்களோடு கோவா தீவுகளின் கிராமம், கிராமமாக சென்ற இவர் போர்த்துக்கேய மொழிப் போதனைகளைத் தமது தாய் மொழியில் அழகாக எடுத்துரைத்தார். இது இலகுவான பணியாகவிருக்கவில்லை. ஐரோப்பிய மொழியின் நுட்பங்களில் வெளிப்படும் கருத்துக்களை உடனடியாக இந்திய மொழியில் எடுத்துரைக்க வேண்டும். இருவர் உரையாற்றியபோது ஒருவர் மொழிபெயர்த்தார். எனவே, யோசேவ்வாஸின் பணியானது கடினமாக இருந்தது. இருபோதகர்களின் பணிக்கு நிகரான பணியை ஆற்றவேண்டியிருந்தது. நீண்ட பல மணித்தியாலங்களாக பாவமன்னிப்பு அருட்சாதனங்களை அளித்ததோடு, சிலுவைப்பாதை தியானத்துடன் ஏனைய பக்தி முயற்சிகளையும் நடத்தினார். இவை பல நற்பயன்களை விளைவித்தது. இப்போதனைகளை கொங்கணி மொழியில் எழுதினார். இலங்கையில் பணியாற்றியபோது இதனை தமிழ் மொழியில் மொழிபெயர்த்தார்.

பணியின் ஆர்வத்தினால் ஆட்கொள்ளப்பட்டவர் தமது உடல் நலத்தையும் கவனியாது பணியாற்றினார். இதனால் இத்தியானப் போதனைகள் பாரிய நற்பயன்களை ஏற்படுத்தின. புத்துணர்ச்சியையும், புதுப்பித்தலையும் ஏற்படுத்தின. இதனால் பலருடைய கவனமும் இவருடைய பக்கமாக திரும்பியது. யோசேவ்வாஸ் அடிகளின் பக்தி, பண்பு, பணியில் ஆர்வம் ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்ட போதகர்கள் இவரை ஒரு எடுத்துக்காட்டான குருவாக கணித்தனர். போதனைகளின் இறுதியில் யோசேவ்வாஸ் அடிகளின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்த தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டார். யோசேவ்வாஸ் அடிகளின்



வாழ்க்கை வரலாற்றை முதலில் எழுதிய செபஸ்ரியன் டொ றேகோ அடிகள் யோசேவ்வாஸ் அடிகளின் இத்தீர்மானத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர் தனது கருத்தில்,

“இலங்கை கத்தோலிக்கரின் விசுவாச வாழ்வைக் காக்கும் நோக்குடன் கன்னடத்தை விட்டு வெளியேறினார். ஆனால் இப்பொழுது தமது வாழ்வின் இறுதிக்காலத்தை ஒரு துறவு மடத்தில் கழிக்க ஒரு துறவற சபையில் இணைந்து கொண்டார்” என்று கூறியுள்ளார். இத்தீர்மானமே இலங்கைக் கத்தோலிக்கரைக் காப்பதற்கு யோசேவ்வாஸ் எடுத்திருந்த மிக முக்கியமான தீர்மானம் என்பதை செபஸ்ரியன் டொ றேகோ புரிந்து கொள்ளவில்லை. யோசேவ்வாஸ் அடிகள் உலகின் சவால்களிலிருந்து தப்பித்து துறவற மடத்தில் அமைதியாக வாழத் தீர்மானித்தார் என தவறாக எடைபோட்டார். ஆனால் இந்த தீர்மானத்தினை இலங்கைப் பணியுடன் இணைத்து நோக்கும்போது அதன் தாற்பரியத்தினைப் புரிந்து கொள்ளலாம்.

ஆக்கம் செல்வி. காமலின் தயானி டேவிட்

தொடரும்



# “வேதனையால் துன்புறும் இதயங்கள் வலிமை பெற இறைவனை மன்றாடுங்கள்”

## பேருவளை படகு விபத்தினால் இறந்தவர்களின் நல்லடக்கத்தின்போது கர்தினால் ஆண்டகை தெரிவிப்பு

இந்த துயரச் சம்பவமானது மனிதர்களாகிய எமக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்திச் சென்றாலும், தமது ஆழமான விசுவாசத்தின் காரணமாக சிந்தாத்திரை அன்னையின் திருச்சுருபத்துடன் அன்னையின் ஆசிரை கடலுக்கும் தமக்கும் பெற்று கொள்வதற்காக படகு பவனியில் சென்ற போது ஏற்பட்ட இந்த துன்பச்சம்பவத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே. இச் சம்பவத்தினால் மிகுந்த துயரத்துக்குள்ளாகி அழுது புலம்புபவர்கள் ஆறுதல் அடைய இறைவனை மன்றாட வேண்டும் என கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் பேருவளை பண்டாரவத்தை படகு விபத்தினால் இறந்தவர்களின் நல்லடக்கத்தில் கலந்து கொண்டு பேருளை புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியின் போது இவ்வாறு தெரிவித்தார். அன்றைய தினம் குருக்கள், அருட்சகோதர சகோதரிகள், இராஜாங்க அமைச்சர்கள், மற்றும் அரசத் தலைவர்கள், மற்றும் விசுவாசிகள் பலரும் பங்குபற்றி இறந்தவர்களுக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்













# கண்ணெதிரே மரணத்தைக் கண்டவர்கள்



நானும் எனது நான்கு குழந்தைகளும் விபத்துக்குள்ளான படகில் மேல் உட்கார்ந்திருந்தபோது படகு கவிழப்போவதை அறிந்துகொண்டேன். முத்த மகன் அப்பா என்று என்னை கட்டியணைத்துக் கொண்டார். பிள்ளைகள் பிள்ளைகளையும் என்னையும் கட்டியணைத்துக் கொண்டு கடலில் மூழ்கினோம். கட்டுக்குருந்தையில் நடைபெற்ற படகுத் திருநாளின் போது தண்ணீரில் மூழ்கிய தந்தையும் அவரது நான்கு குழந்தைகளும் அற்புதமாக காப்பாற்றப்பட்டுள்ளனர். பேருவளை பர்னொந்து என்ற பிரதேசத்தை சார்ந்த பிரான்சிஸ் விலாயி அட்லி குரே இவ்வாறு கருத்து தெரிவித்தார். அன்று சிந்தாத்திரை அன்னையின் திருவிழாவின் இறுதி நாளான படகு திருநாளில் நானும் எனது நான்குப் பிள்ளைகளும் கலந்து கொண்டோம். மூத்த மகன் ஷோன் 12, இரண்டாவது ஷேவின் 11 வயது, மூன்றாவது மகன் ஷெனெத் 8, நான்காவது மகன் சஷேன் 4 வயது, நானும் எனது நான்கு குழந்தைகளும் விபத்துக்குள்ளான படகின் மேல் உட்கார்ந்திருந்தபோது படகு கவிழப்போவதை அறிந்துகொண்டேன். மூத்த மகன் அப்பா என்று என்னை கட்டியணைத்துக் கொண்டார். பிள்ளைகள் பிள்ளைகளையும் என்னையும் கட்டியணைத்துக் கொண்டு அதனோடு படகும் கவிழ்ந்து கடலில் மூழ்கினோம். நாங்கள் கடலுக்குள் செல்வதை என்னால் உணரக் கூடியதாக இருந்தது. எனக்கு மயக்கம் ஏற்பட்டு விட்டது. எனது நான்கு குழந்தைகளையும் பிடித்துக்கொண்டு மேலே வந்தனர். சிறிய குழந்தையை ஒருவர் காப்பாற்றியுள்ளார். என்னையும் படகில் வந்த ஒருவர் மேலே தூக்கிக் கொண்டார். ஒரு படகின் மூலமாக முதல் உதவிகள் வழங்கி வைத்தியசாலைக்கு என்னையும் குழந்தைகளையும் எடுத்து சென்றனர். என்னை நாகோட வைத்தியசாலையின் அவரச சிகிச்சை பிரிவிற்கும் பிள்ளைகளை பேருவளை வைத்தியசாலையிலும் அனுமதித்தார்கள் குடும்பமாக காப்பற்றப்பட்டது நாங்கள் மட்டுமே என நினைக்கின்றேன். அதற்காக இறைவனுக்கு மகிமையும் புகழ்ச்சியும் உண்டாகட்டும்.

**அட்லி குரே**
**சாரதி**
**பெற்றோலிய**
**எரிபொருள் நிலையம்**

## பேருவளை அனர்த்தத்தில் இறந்தவர்கள்



# புனித யோசேவ்வாஸைப் பின்பற்றி, நான் சிறிய புனிதராவேன்

கண்டியில் வைசூரி நோய் பரவியபோது இரக்கப்பணிகளை செய்தமை. வைத்திய சாலையை கொண்டு நடத்தியமை, நோயாளரைப் பராமரித்தல், இறந்தோரை அடக்கம் செய்தல், மாறுவேடம் தரித்து தேவையிலுள்ளோருக்கு பணியாற்றியமை



South Barஇல்1687ல் தடம்பதித்தல். பெரிய கரிசலிலுள்ள திருச்சிலுவை, கல்லேகடைகடு திருச்சிலுவை. செட்டிக்குளம் பாலை மரப்பொந்திலுள்ள திருச்சிலுவை, சில்லாலையிலுள்ள திருச்சிலுவை, வாக்கோட்டை திருத்தலத்திலுள்ள திருச்சிலுவையையும் திருச்சுருபமும், வல்லே ஆலயத்தில் யானைத்தந்தத்தினால் செதுக்கப்பட்ட புனித கார்மேல் அன்னையின் திருச்சுருபம்

புனித யோசேவ்வாஸ் அடிகளாரைப் போல் சிறந்த மறைத்தூதராக நானும் விளங்கி, சிறிய புனிதராவேன்.




வருடம் முழுவதும் எம் நாட்டு புனிதரைப் பற்றி அறிந்து, இயேசுவின் சிறிய மறைத்தூ-தராவதற்கு அடிகளாரின் சிறுபராயமும் சிறந்த வழிப்பாதையாகும். நற்கருணை ஆராதனை, திருச்செபமாலை பக்தி மற்றும் இரக்கச் செயல்களால் இயேசுவுக்கும் எம் பெற்றோருக்கும் உகந்த நல்ல பிள்ளைகளாவோம்.






புனித யோசேவ்வாஸ் ஆண்டையொட்டி மட்டக்குளி, புனித மரியாள் மறைப்பாடசாலை மாணவர்களின் சித்திரங்கள்



ஆக்கம் : A. நிகிஷா, தரம் - 2A



ஆக்கம் : A. நிஷான், தரம் 10



ஆக்கம் : G. டிரோன், தரம் 10

## பொது அறிவு

- ✖ உலகின் மிக நீளமான அமோசன் ஆறு எந்தக் கடலில் கலக்கிறது? **– அட்லாண்டிக் பெருங்கடல்**
- ✖ புகழ்பெற்ற நீர்வீழ்ச்சியான ஏஞ்சல் எங்குள்ளது? **– வெனிசுலோ**
- ✖ ரஷ்யாவில் உள்ள ஆழமான ஏரியின் பெயர் என்ன? **– பைகல்**
- ✖ 1600 மைல் நீளம் கொண்ட சம்பீசி ஆறு எந்தக் கண்டத்தில் உள்ளது? **– ஆப்பிரிக்கா கண்டத்தில்**
- ✖ ஒரு லீட்டர் கடல் நீரில் எத்தனை கிராம் சாதாரண உப்பு உள்ளது? **– 3.5 கிராம் உப்பு**
- ✖ இந்தியாவின் மிக உயரமான நீர்வீழ்ச்சியின் பெயர் என்ன? **– ஜோக் நீர்வீழ்ச்சி**
- ✖ உலகில் பெரிய நன்னீர் ஏரி எது? **– சுபீரியர் ஏரி**
- ✖ உலகின் மூன்றாவது பெரிய கடல் எது? **– இந்தியப் பெருங்கடல்**
- ✖ உலகிலேயே அழகும் அமைதியும் நிறைந்த நதி எது? **– தேம்ஸ் நதி**
- ✖ அதிக எண்ணிக்கையிலான துணை நதிகளைக் கொண்டுள்ள நதி எது? **– கங்கை நதி**

## சிந்திக்க வேண்டிய சிந்தனை துளிகள்

1. மனிதனின் பார்வை நேராக இருந்தால் ஏதும் தடையிருக்காது
2. பொறுமையிலும் உயர்ந்த தவம் வேறு எதுவும் இல்லை
3. தவறை ஏற்பது தான் மனிதனின் நன்னயத்தின் உச்ச நிலை
4. தெரியாது என்று உணர்வதற்கு அறிவை அடைவதற்கு வழியாகும்.
5. ஒழுக்கம் போர்களம் போன்றது. நாம் ஒழுக்கத்தோடு வாழ
6. மனதை பொத்தல் குடிசையாக வைத்திருக்க வேண்டாம் அது எந்த புயலையும் தாங்கும் இரும்பு கோட்டையாக இருக்கட்டும்.
7. சோம்பலை தடுக்க வேண்டுமானால் அதிகமாக மனிதன் உண்பதை தவிர்க்க வேண்டும்
8. வாக்குறுதி முழு மதி போன்றது. கொடுத்த வாக்குறுதியை உடனே நிறைவேற்ற விட்டால் அது நாளுக்கு நாள் தேய்ந்து விழும்.

**தகவல் : S. பிலோமினா, அஸ்கிரிய, மாத்தளை**

## இயேசு



- இயேசு பெத்தலேகம் என்னும் ஊரில் மாட்டு தொழுவத்தில் பிறந்தார்.
- இவர் பல அற்புதங்களை செய்து-ள்ளார்.
- இவர் 30 வயதில் திருமுழுக்குப் பெற்றார்.
- 12 வயதில் காணாமல் போனார்
- இயேசு செய்த முதல் அற்புதம் கானா ஊரில் தண்ணீரை இரசமாக மாற்றியது.

**ஆக்கம் : U. ஆருண்யா, தரம் 6.**

## சரியா(✓) தவறா (✗) போட்டி

1. நற்செய்தி நூல்கள் நான்கு ( )
2. இயேசு மிகவும் அன்பு செய்த சீடர் பேதுரு ( )
3. எமது நாடு 1949ம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. ( )
4. படைப்பு பற்றி தொடக்க நூலில் கூறப்பட்டுள்ளது. ( )
5. கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே நல்லது ( )
6. இவ்வாண்டு இலங்கை முழுவதும் புனித யோசேவ்வாஸ் ஆண்டாக பிரகடனப்படுத்-தப்பட்டுள்ளது ( )
7. ஓய்வு நேரத்தை நாம் பயனுள்ளதாக கழிக்க வேண்டும். ( )
8. தவக் காலத்தில் நாம் சிலுவைப்பாதை செய்தல் மட்டும் போதுமானது. ( )
9. எம் நாடு பல்லின மக்கள் வாழும் நாடாகும். ( )
10. அன்பு செய்வதே இறைவனுக்கு விருப்பமான செயலாகும். ( )

ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு - 08.

# சான்றோரைச் சார்ந்தது

மாணவர் ஒளி

**தூய பவுல் அடியார் குறிப்பிடுவது போல் அழைப்புக்கேற்ற தூய வாழ்வு வாழ வேண்டும். அப்போதுதான் இறையாட்சியைக் கட்டி எழுப்பும் உன்னதப் பணிகளைச் செய்யமுடியும்.**

**உங்கள் கடமை என்ன? குறிப்பிட்ட சூழ்நிலையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? என்பவை பற்றி உங்களுக்குச் சந்தேகம் எழுமானால் சான்றோர்களைப் பின்பற்ற வேண்டும். ஆழ்ந்து சிந்திக்கின்ற, மன ஒருமைப்பாடுமிக்க, சுதந்திரமாக, கோணல் புத்தியில்லாத, நல்வழியில் நடக்கின்ற அந்தச் சான்றோர்கள் எப்படி நடந்து கொண்டார்களோ அப்படி நீங்களும் செயல்படுங்கள். எல்லாவற்றிலும் சான்றோர்களைப் பின்பற்றுங்கள்.**

சரி, சான்றோர்கள் என்றால் யார்? வாழ்க்கையில் நாம் யாரைப் பின்பற்ற வேண்டும்? இவற்றிற்கு ஓர் அற்புதமான விளக்கமும் தரப்படுகிறது.

- எடுத்தேன், முடித்தேன் என்று எதையும் செய்யாமல் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படுங்கள்.
- சிறிய வேலையானாலும், பெரிய வேலையானாலும் பதற்றத்துடனோ, ஏனோதானோ என்றோ அல்லாமல் செயலாற்றுங்கள்.
- எந்தத் தீமைகளுக்கும், ஆசைகளுக்கும் அடிபணியாமல் சுதந்திரமாக வேலை செய்பவர்கள்.
- குறுக்கு வழிகளை நாடாமல் நேர் வழியில் செல்பவர்கள்.
- முக்கியமாக தூய வாழ்க்கையில் நிலை பெற்றவர்கள்.

இவர்கள் சான்றோர்கள், இவர்களைப் பின்பற்ற வேண்டும். சான்றோரின் பண்புகளைத் திருப்பாடல் எண் 15இல் உள்ள வார்த்தைகள் நமக்கு எடுத்தியம்புகின்றன.

**"ஆண்டவரே, உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்? உம் திருமலையில் குடியிருப்பவர் யார்?"**

**மாசற்றவராய் நடப்போரே**
**இன்னார் நேரியவற்றைச் செய்வர்,**
**உளமார உண்மை பேசுவர்**

**தம் நாவினால் புறங்கூறார்,**
**தம் தோழருக்குத் தீங்கிழையார்**
**தம் அடுத்தவரைப் பழித்துரையார்**

**தமக்குத் துன்பம் வந்தாலும் கொடுத்த**
**வாக்குறுதியை மீறார்.**

இவ்வாறு நடப்போர் என்றும் நிலைத்திருப்பர். இப்படிப்பட்டவர்களே பின்பற்றத் தகுந்தவர்கள். இந்நிலைக்குத் தங்களைச் சிறிது சிறிதாகப் பக்குவப்படுத்திக் கொண்டவர்களையே இன்று நாம் புனிதர்கள் எனவும், பின்பற்றத் தகுந்தவர்கள் எனவும் கருதுகிறோம். தூய பவுல் அடியார் குறிப்பிடுவது போல் அழைப்புக்கேற்ற தூய வாழ்வு வாழ வேண்டும். அப்போதுதான் இறையாட்சியைக் கட்டி எழுப்பும் உன்னதப் பணிகளைச் செய்யமுடியும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், "நற்செய்தியில் மகிழ்வோம்" என்ற தமது இலட்சிய அறிக்கையில் சாட்சியம் இல்லாத, சொகுசான வாழ்க்கை முறையை அழுத்தமாக விமர்சிக்கிறார். "தமது சொகுசான வாழ்வையே மையப்படுத்தி, ஏழை மக்கள் மனித மாண்புடன் வாழ முயற்சிகள் எடுக்காத கிறிஸ்தவச் சபைகள் நீண்ட நாள் நிலைக்காமல் போகும். சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய ஆவேசமான விவாதங்கள், அரசியல் அமைப்பு மற்றும் செயல்பாடுகளைக் காரசாரமாக விமர்சனம் செய்தல் போன்றவற்றால் பலன் ஒன்றுமில்லை. அவர்கள் கடைப்பிடிக்கும் சமயச் சடங்குகளும், பக்தி முயற்சிகளும் பலனற்ற கூட்டங்களும் அர்த்தமற்றவை. நாம் ஒவ்வொருவருமே பிறருக்குச் சொல்வதை நம் வாழ்வில் பிரதிபலிக்கும்படி வாழ்வதே அனைத்துலகோராலும் கண்டு பாவிக்கத் தகுந்த சான்றோரின் வாழ்வாக இருக்கும்.

## இந்த உரையாடலைக் கவனியுங்கள்.

நீச்சல் பயிற்சியாளர் முன் ஓர் இளைஞன் வந்தான்.
"நான் நீச்சல் கற்றுக்கொள்ள விரும்புகின்றேன்" என்றான்.
"அதுகுறித்து ஏதேனும் நிபந்தனையுண்டா?"
"நான் ஒரு டன் முட்டைக்கோஸை எடுத்துச் செல்லுமளவுக்கு நீச்சல் கற்றுக்கொள்ளுவதில் நிபுணத்துவம் பெற விரும்புகின்றேன்"
"முட்டைக்கோஸ் எதற்காக?"
"அந்தத் தீவில் என் உணவுக்கு முட்டைக்கோஸ் தேவைப்படுகிறது"
"அங்கு இன்னும் நல்ல உணவு உண்டு"
"எனக்கு நம்பிக்கை இல்லை"
"ஒரு டன் முட்டைக்கோஸ் மூட்டையுடன் நீ நீந்த முடியாது"
"எனக்கு அது பாரமல்ல. அத்தியாவசியமான பண்டம்"
இன்று நம்மில் பலரின் வாழ்வு இப்படித்தான் உள்ளது. துறவிகளாயினும், பொது நிலையினராயினும் நம்மில் பலரும் இந்த இளைஞனைப் போலத்தான் இருக்கின்றோம்.



- சுமக்கத் தேவையில்லாத, தூக்கி எறிய வேண்டிய பாரங்களை, தேவையற்ற கவலைகளை, பாதுகாப்புணர்வுக்காகச் சுமந்து அலைகின்றோம்.
- இறையாட்சி விழுமியங்களுக்கு எதிரான உலக மதிப்பீடுகளை உள்வாங்கிப் பணம், பதவி, அதிகாரம், அந்தஸ்து இவற்றின் பாரங்களால் மூழ்கடிக்கப்படுகின்றோம்.
- சாதி, இனம், சுற்றம், குடும்பம் என்ற சுமைகளின் பாரத்தால் இறைமகன் இயேசுவின் சாட்சிய வாழ்வுக்கு எதிர்ச்சாட்சிகளாய் வாழும் நிலையே நம்மிடையே காணப்படுகின்றது.
- நிறைவேறாத ஆசைகள், எண்ணங்கள், ஏக்கங்கள் பகற்கனவுகளால் அலைக்கழிக்கப்பட்டு "எதிர்மறை" எனும் சிறைக்குள் பிணைக் கைதிகளாகி விடுகின்றோம்.

இன்றையச் சூழலில் நம்மில் எத்தனை பேர், தூய பவுல் அடியார் சுட்டிக்காட்டும் முறையில் இறையாட்சி பற்றிய கனவுகளுடனும், கவலைகளுடனும் வாழ்கின்றனர்?

### பகவத் கீதையின் அற்புதமான வரிகள்

நமக்கு அதிமுக்கியக் கவலையாக இருக்க வேண்டியது அனைத்து மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்பதே. இந்தப் பணியைச் செய்யாத வரை நாம் நமது கவலைகளையும், ஏமாற்றங்களையும் மட்டுமே சுமந்து கொண்டிருப்போம். தேவையற்ற சுமைகளிலிருந்து விடுதலை பெற ஒரே வழி கிறிஸ்துவை ஆழமாக அறிதலும், அனுபவித்தலும், அறிவித்தலுமே.

### அசைபோடத் தகுந்தவை.

புறப்பொருட்கள் மீது கவனத்தைக் குவிப்பவர்களுக்கு அவற்றின் மீது பிடிப்பு வருகிறது. அவர்களால் ஒரு நாளும் பிறவிப் பெருங்கடலை நீந்த முடியாது. இந்தச் சுமைகளுடன்,

**பிடிப்பிலிருந்து ஆசை**
**ஆசையிலிருந்து பதவி**
**பதவியிலிருந்து அதிகாரம்**
**அதிகாரத்திலிருந்து ஆணவம்**
**ஆணவத்திலிருந்து வருகிறது அழிவு**

இதனைப் புரிந்துகொண்டால் சொர்க்கம் நம் அருகில்.

# புனித யோசேவ்வாஸின் அன்றைய பணிகளும் இன்றைய தலைமைத்துவமும்

இந்தியாவில் கோவா பிரதேசத்தின் சென்தொ ஆல் என்னும் கிராமத்தில் பிராமண வம்சத்திலே யோசேவ்வாஸ் பிறந்தார். சிறுவயது முதல் சமயப் பற்றோடு வளர்க்கப்பட்டார். ஐந்து வருடங்கள் கோவாவில் பணியாற்றிய இவர் இலங்கைவாழ் கத்தோலிக்கர்களின் துன்பதுயரங்களையும், துர்ப்பாக்கிய நிலையையும் பற்றி கேள்வியுற்று இரகசியமாக இலங்கை தீவுக்குள் எவ்வாறு நுழையலாம் என சிந்திக்கலானார். பின்னர் வர்த்தக கப்பலொன்றில் தொழிலாளியாக வேடம் பூண்டு இலங்கைத் தீவை வந்தடைந்தார். சுய விருப்பத்தோடு இங்கு வருகைதந்த அடிகளார் ஆழமான நம்பிக்கையோடு அறியாத நாட்டில் தெரியாத மொழிபேசும் மக்கள் மத்தியில் கஷ்டமான பணியில் ஈடுபட்டார். தனக்கு இறைவன் தந்த அழைப்பென ஏற்றுக்கொண்டார். உண்ண உணவின்றி கால்நடையாகவே பிரயாணம் செய்து கிறிஸ்தவ சமயம் பற்றிய அறிவை ஊட்டினார்.

அழிந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் எமது சிறிய தீவுக்குள் நுழைந்து தனது அர்ப்பண வாழ்வை மகிழ்ச்சியுடன் ஆரம்பித்தார். ஆனால் தற்போது அதாவது சுருங்கி வரும் உலகில் ஒரு சிறிய தீவுக்குள் வாழும் நாம் எமது தலைமைத்துவத்தை ஏற்க மறுக்கின்றோம். அன்றைய இலங்கையில் புனித யோசேவ்வாஸ் தனியொருவராக இலங்கை வாழ் மக்களுக்கு ஒரு தலைவராக இருந்து பணியாற்றினார். அன்றைய புனிதரின் பணிகளுக்கும் இன்றைய தலைமைத்துவத்திற்கும் இடையில் நிறைய இடைவெளி காணப்படுகின்றது. புனிதர் தானாகவே முன்வந்து தன்மை எமக்காக அர்ப்பணித்தார். இன்றை சமூகத்தில் ஒருவர் கூறினாலும் கூட தலைமைத்துவத்தை ஏற்க மறுக்கின்றனர். அவ்வாறு தலைமைத்துவத்தை ஏற்றாலும் அன்றைய அமைதியான சூழல் காணப்படாது, சண்டை சச்சரவற்ற சூழ்நிலை காணப்படுகின்றது. அன்று அவர் எமக்கு பஞ்சம் ஏற்பட்ட வேளையில் இறைவனில் பரிந்துபேசி மழையை வரவைத்தார். ஆனால் இன்றைய தலைமைத்துவத்தில் பொய்களைக் கூறி தலைமைத்துவத்தை எமது வாக்குகளின் மூலம் பெற்று தலைவராகி பின்னர் பணிகளை செய்ய முன்வந்தவர்களாக உள்ளார்கள்.

இவர் செய்த பணிகளால் அதாவது புனிதரின் அர்ப்பண வாழ்வால் 2015ம் ஆண்டு தை மாதம் 14ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதராக பிரகடனம் செய்யப்பட்டார். அதுமட்டுமன்றி 2017ம் ஆண்டை இலங்கையில் மட்டும் புனித யோசேவ்வாஸ் ஆண்டாக பிரகடனம் செய்துள்ளார்கள். புனிதர் அன்று செய்த பணிக்கு அவருடைய அர்ப்பண வாழ்வுக்கு அவர் பெற்ற மதிப்பீடே இவை. இன்றைய தலைமைத்துவம் மனதிலிருந்து வந்ததை அல்ல பணத்தால் வந்தவை. புனிதர் கூறுகின்றார் "விளங்கிக் கொள்ளுங்கள், எவருமே கவனியாது விட்ட எதையுமே அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது" என்கின்றார். புனிதரின் வார்த்தைக்கு இணங்க நாளைய தலைவர்களாக மாற இருக்கும் நாம் எமது தலைமைத்துவத்தை சரிவரச் செய்து, மற்றுமொரு புனித யோசேவ்வாஸாக மாற முயற்சித்து இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாக மாறுவோம்.

**ஆக்கம் : A. ப்ரினிசியா, தரம் 11.**
**மட்டக்குளி மறைப்பாடசாலை**

# அப்பாவி மக்களின் வலியை என்னால் உணர முடிகிறது



இன்றைய உலகில் பயங்கரவாதம் மற்றும் வன்முறைகளுக்குப் பலியாகும் மக்கள் குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ். 19.02.2017 ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில், இவ்வுலகில் வன்முறைக்குப் பலியாகும் மக்கள் குறித்து கவலையை வெளியிட்ட திருத்தந்தை, காங்கோ ஜனநாயக குடியரசின் மத்திய கசாய் பகுதியில் இடம்பெறும் மோதல்களால் பலியாகும் அப்பாவி மக்களின் வலியை தன்னால் உணரமுடிகிறது என்று கூறினார்.

தங்கள் குடும்பங்களில் இருந்தும், கல்வி நிலையங்களிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்டு, சிறார் இராணுவ வீரர்களாக நடத்தப்படும் பாலகர்கள் குறித்து ஆழ்ந்த கவலைக் கொண்டுள்ளதாக உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவர்களின் துன்ப நிலைகளை அகற்ற, நாடுகள் மற்றும் அனைத்துலக சமூகத்தின் நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆப்ரிக்காவில் வன்முறைகளால் துன்புறும் மக்களுக்காக செபிக்கும் அதேவேளை, அண்மை நாட்களில் வன்முறை நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் பாகிஸ்தான் மற்றும் ஈராக் நாட்டு மக்களையும் நம் செபங்களில் நினைவுகூர்வோம் என்ற அழைப்பையும் முன்வைத்தார் திருத்தந்தை.

# நற்செய்திக்கு திறந்த மனதுள்ளவராய் இருங்கள் - திருத்தந்தை



அனைத்து மக்களும் புரிந்துகொள்ளும் மொழிகளில் நற்செய்தியை அறிவிப்பதும், நற்செய்திக்குச் சான்று பகர்வதும், இக்காலத்தின் பண்பாட்டுமயமாக்கலுக்கு, மாபெரும் சவாலாக உள்ளது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

Marianists என்றழைக்கப்படும், அமலமரியின் அருள்தந்தையர் துறவு சபையின் பொதுப்பேரவையில் கலந்துகொள்ளும், நாற்பது பிரதிநிதிகளை, 18.02.2017 சனிக்கிழமையன்று, திருப்பீடத்தின் கொன்சிஸ்தோரோ அறையில் சந்தித்து உரையாற்றிய, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அச்சபையை ஆரம்பித்தவரின் துணிச்சலான வாழ்வை எடுத்துக்காட்டாகக் கொண்டு பணிபுரியுமாறு கேட்டுக்கொண்டார். ஏழை நாடுகளில், குறிப்பாக, ஆப்ரிக்கா மற்றும் ஆசியாவிலுள்ள ஏழை நாடுகளில், இச்சபையினர் பணியாற்றி வருவதைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, எந்தவித வேறுபாடுமின்றி, எல்லாருக்கும் நற்செய்தி அறிவிக்கச் செல்வதற்கு, முதலில், தனிப்பட்ட வாழ்விலும், குழு வாழ்விலும், மனமாற்றம் அவசியம் என்பதையும் வலியுறுத்தினார்.

சபையை ஆரம்பித்தவரின் தனிவரத்திற்கும், சபையின் ஆன்மீக மரபிற்கும் பிரமாணிக்கமாய் இருப்பது குறித்தும், அதேநேரம், மக்களின் புதிய தேவைகளுக்குத் திறந்த மனதுள்ளவராய் இருப்பது குறித்தும் சிந்திக்குமாறும், Marianists சபையினரைக் கேட்டுக்கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

Marianists சபை, புனித இயேசு மரியின் ஸ்தனிஸ்லாவோ அவர்களால், 1673ம் ஆண்டில் போலந்தில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையினர், தற்போது இந்தியா உட்பட 26 நாடுகளில், பணியாற்றுகின்றனர்.

# பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டவரின் நூலுக்கு முகவுரை




தான் சிறுவனாக இருந்தபோது பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டது குறித்தும், அவ்வாறு நடத்தியவரை மன்னித்து வாழ்வது குறித்தும் Daniel Pittet என்பவர் எழுதியுள்ள புத்தகத்திற்கு, முகவுரை எழுதியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு சிறுவனின் வாழ்வில், அந்நிகழ்வு பல ஆண்டுகளுக்கு தன் பாதிப்பைக் கொண்டிருக்க முடியும் என்பதை 2015ம் ஆண்டு Daniel அவர்களை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடியபோது உணர்ந்ததாக, "மன்னியும், தந்தையே" என்ற புத்தகத்தின் முகவுரையில் கூறும் திருத்தந்தை, இறை ஊழியர்களால் தவறான முறையில் நடத்தப்பட்ட சிறார்களின் குடும்பங்களிடம், தான் மன்னிப்பை வேண்டுவதோடு, அவர்களுடன் தன் அன்பின் மற்றும் மனவலியின் உணர்வுகளை பகிர்வதாகவும் தெரிவித்துள்ளார். டேனியலை தவறாகப் பயன்படுத்திய முன்னாள் அருள்பணியாளரை 44 ஆண்டுகளுக்குப்பின் அவர் சந்தித்தபோது, அருள்பணியாளரை மன்னிப்பதாக கூறியதுடன், அந்த மன்னிப்பின் அடிப்படையில் தன் வாழ்வை கட்டியெழுப்பியதாகவும், டேனியேல் அவர்கள் தன் புத்தகத்தில் எழுதியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இச்செயல் வழியாக, அந்த முன்னாள் அருள்பணியாளர், தன் கொடூரச் செயலின் விளைவுகளை உணர்ந்திருப்பார் எனவும், அந்நூலின் முகவுரையில்




# புலம்பெயர்ந்தவர் மற்றும், வெளிநாட்டவரை வரவேற்க அழைப்பு



உலகமயமாக்கப்பட்ட புறக்கணிப்புக் கலாச்சாரத்திற்கு எதிராக, அடிக்கடி குரல் எழுப்பி, புலம்பெயர்ந்தோரை வரவேற்குமாறு கூறிவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 18.02.2017 சனிக்கிழமையன்றும், தனது டுவிட்டரில், இதே கருத்தையே வலியுறுத்தியுள்ளார். இதற்கிடையே, சிரியா உள்ளிட்ட ஏழு முஸ்லிம் நாடுகளின் பயணிகள், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குள் வருவதற்குத் தடை விதிக்கும் வகையில், வருகின்ற வாரம் புதிய ஆணை பிறப்பிக்கப்படும் என்று, அரசுத்தலைவர் டொனால்டு ட்ரம்ப் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிரியா, ஈராக், ஈரான், லிபியா, ஏமன், சொமாலியா, சூடான் ஆகிய நாடுகளின் புலம்பெயர்ந்த மக்களும், பயணிகளும் அமெரிக்காவில் நுழைய தடை விதித்து அரசுத்தலைவர் ட்ரம்ப் அவர்கள், கடந்த தை 27-ம் தேதி உத்தரவிட்டார். இதனால் ஏறக்குறைய அறுபதாயிரம் விசாக்கள் ரத்து செய்யப்பட்டன. அமெரிக்க அரசுத்தலைவரின் இந்த உத்தரவை எதிர்த்து, பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. சியாட்டிலில் உள்ள மாவட்ட நீதிமன்றம் அரசுத்தலைவர் ட்ரம்பின் தடையை நீக்கி உத்தரவிட்டது. இதை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாஷிங்டனில், செய்தியாளர்களிடம் பேசிய அரசுத்தலைவர் ட்ரம்ப் அவர்கள், சிரியா உட்பட, ஏழு நாடுகளின் பயணிகளுக்குத் தடை விதிக்கும் வகையில் அடுத்த வாரம் புதிய ஆணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். புதிய தடை உத்தரவு குறித்து அரசுத்தலைவர் மாளிகை வட்டாரங்கள் கூறியபோது, நீதிமன்றத்தால் தடை விதிக்க முடியாத வகையில் புதிய சட்டம் வரையறுக்கப்படும் என்று தெரிவித்தன.

மேலும், திருப்பீடத்திற்கும், கானாவுக்கும் இடையே தூதரக உறவுகள் உருவாக்கப்பட்டதன் நாற்பதாம் ஆண்டு நிறைவு, கானா நாட்டின் அறுபதாவது சுதந்திர தினம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு, தனது சிறப்பு பிரதிநிதியாக, கர்தினால் ஜுசப்பே பெர்த்தெல்லோ (Giuseppe Bertello) அவர்களை நியமித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். வத்திக்கான் நகர நாட்டின் நிர்வாகத் தலைவரான கர்தினால் Giuseppe Bertello அவர்கள், வருகிற பங்குனி 3ம் தேதி முதல், 6ம் தேதி வரை கானாவில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வார் என, திருப்பீடம் அறிவித்துள்ளது. மேற்கு ஆப்ரிக்க நாடான கானா, 1957ம் ஆண்டு பங்குனி 6ம் தேதி, பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது.

# மனித மனதில் போர் தொடங்குகிறது - திருத்தந்தையின் மறையுரை



மனித மனதில் போர் தொடங்குகிறது, எனவே, நாம் அனைவருமே அமைதியைக் காப்பதற்கு பொறுப்பாளர்கள் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் வழங்கிய மறையுரையில் கூறினார். தொடக்க நூலில், கடவுள் நோவாவுடன் மேற்கொண்ட உடன்படிக்கை கூறப்பட்டுள்ள முதல் வாசகத்தை மையப்படுத்தியும், நோவா பேழையிலிருந்து அனுப்பப்பட்ட புறா, கடவுள் பதித்த வானவில், மற்றும் உடன்படிக்கை என்ற உருவகங்களைப் பயன்படுத்தியும் மறையுரை வழங்கினார், திருத்தந்தை.

பேழையிலிருந்து அனுப்பப்பட்ட புறா, ஒலிவக் கிளை ஒன்றைக் கொணர்ந்தது என்பதைக் குறிப்பிட்டுப் பேசியத் திருத்தந்தை, பெருவெள்ளத்திற்குப் பின், கடவுள் மனிதர்களுக்கு வழங்கிய முதல் பரிசு, அமைதி என்பதைக் குறிக்கவே, ஒலிவக் கிளையை புறா கொணர்ந்தது என்று எடுத்துரைத்தார். இறைவன் வழங்கும் பரிசான அமைதியைக் கட்டிக்காப்பது மிகக் கடினமான ஒரு சவால் என்பதை, தன் மறையுரையில் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, ஆயுதங்களை உருவாக்கி, விற்பனை செய்யும் சக்தி மிக்க மனிதர்கள், இவ்வுலகம், அமைதி இழந்து, போரினால் மக்கள் இறப்பதை விரும்புகின்றனர் என்று, வருத்தத்துடன் குறிப்பிட்டார். உலகில் மனிதர்கள் சிந்தும் ஒவ்வொரு இரத்தத் துளிக்கும் இறைவன் ஈடு கேட்பார் என்று, முதல் வாசகத்தில் கூறப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, அமைதியில் வாழ்வதுபோல் உணரும் நாமும், உலகில் சிந்தப்படும் இரத்தத்திற்காக, இறைவனிடம் கணக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்று கூறினார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்

# தவக்காலத்தில் ஒரு நாள் ஒரு நற்செயல்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 பங்குனி குடிப்பழக்கத்தில் இருப்போருக்காக செபிப்போம் | 26 பங்குனி பிறரைப் பற்றிப் பேசாமல் இருப்போம் | 30 பங்குனி இன்று அமைதியாக இருப்போம் | 03 சித்திரை பொறுப்புள்ள பெற்றோராக இருப்போம் | | |
| 24 பங்குனி குழந்தை தொழிலாளர்களுக்காக செபிப்போம் | 27 பங்குனி சிறுவர் சிறுமிகளுக்காக செபிப்போம் | 31 பங்குனி தண்ணீரை சிக்கனப்படுத்துவோம் | 04 சித்திரை சிறையில் இருப்போருக்காக செபிப்போம் | 07 சித்திரை பகைவர்களை அன்பு செய்வோம் | 10 சித்திரை நல்ல மனமாற்றத்தோடு பாவசங்கீர்த்தனம் செய்வோம். |
| 24 பங்குனி அரசியல் தலைவர்களுக்காக செபிப்போம் | 28 பங்குனி அநீதிகளுக்காக செபிப்போம் | 01 சித்திரை விவிலியம் வாசிப்போம் | 05 சித்திரை எமது அருட்தந்தை, அருட்சகோதரிகள் மற்றும் துறவறத்தாருக்காக செபிப்போம் | 08 சித்திரை யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக செபிப்போம் | 11 சித்திரை பங்கு வளர்ச்சிக்காக செபிப்போம் |
| 25 பங்குனி இன்று முழுவதும் T.V பார்க்காமல் இருப்போம் | 29 பங்குனி மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவோம் | 02 சித்திரை உணவு அருந்தும்போது அன்றைய நிகழ்வுகளை குடும்பத்தோடு பகிர்வோம் | 06 சித்திரை தீவிரவாதம் ஒழிய செபிப்போம் | 09 சித்திரை எமது நண்பர்களுக்காக செபிப்போம் | 12 சித்திரை திருவழிபாட்டின் முக்கியமான திருவழிபாட்டு நிகழ்வில் விசுவாசத்துடன் பங்கேற்போம் |

# இம்மாதப் புனிதர்கள்





## புனித தாவீது - பங்குனி 01

6ஆம் நூற்றாண்டு துறவற சபையை நிறுவியவர். சிறந்த ஆசிரியராகவும், தவ வாழ்வும் வாழ்ந்தவர். அவர் ஏற்படுத்திய துறவறமடம் இருந்த இடத்தில் தற்போது அவரது பெயரால் பிரம்மாண்டமான திருத்தலம் அமைந்திருக்கிறது. 588ஆம் ஆண்டு பங்குனி 1ஆம் திகதி இறந்தார். இறக்கும் தருவாயில் இருந்தபோது அவரைச் சுற்ற அவரது சகோதர துறவிகள் சோகத்துடன் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் "சகோதரர்களே, உங்கள் மீது நீங்கள் சுமந்து கொண்டிக்கும் நுகத்தை ஒரே மனத்துடன் இறுதிவரை சுமப்பவர்களாக நிலைத்திருங்கள். என்னிடமிருந்து நீங்கள் கேட்டறிந்தவற்றையும் கண்டவற்றையும் நிறைவேற்றுபவர்களாக இருங்கள்" எனக்கூறினாராம். பல நூற்றாண்டுகளாக இவரது விழா லண்டன் அமெரிக்கா போன்ற நாடுகளில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

## புனித கசிமீர்

## பங்குனி 04



போலந்து நாட்டு அரசக் குடும்பத்தைச் சார்ந்தவர். அந்நாட்டு மன்னரின் 11 பிள்ளைகளில் 3வது மகன். அரண்மனையில் வாழ்ந்தாலும் நோயுற்றோர் ஒடுக்கப்பட்டோர் ஆதரவற்றொர் கைம்பெண்கள் சிறையில் வாடியோர் மீது அன்பும் அக்கரையும் கொண்டு அவர்களைத் தேடிச் சென்று தேவையான உதவிகளைச் செய்வார். அன்னை மரியாவின் மீது தனிப்பற்றும் பக்தியும் கொண்டிருந்தார். இறுதிவரைக் கற்பு என்னும் நெறியினை போற்றிக் காத்து வந்தவர் கொடிய நோயான காசநோயினால் பாதிக்கப்பட்டு 23ஆம் வயதில் மரணத்தைத் தழுவியவர். இவர் இறந்த 122ஆம் ஆண்டில் கல்லறைத் திறக்கப்பட்டபோது இவரது உடல் அழியாமல் நறுமணம் வீசிக் கொண்டிருந்தது.

## புனிதையர்

## பெர்பெத்துவா, பெலிசித்தா



## மறைசாட்சியர் – பங்குனி 07

**புனித பெர்பெத்துவா :** இவ்விரு மறைசாட்சியரைக் குறித்த செய்திகள் "பெர்பெத்துவா - பெலிசித்தா ஆகியோரின் மறைசாட்சி மரணம்" என்ற ஆவணத்திலிருந்து கிடைத்தவை. இவர்கள் தொடக்க காலத்தில் திருச்சபையில் வரலாற்று ஆதாரங்கள் உள்ள வேத சாட்சிகளுள் புனிதைகள் பெர்பெத்துவாவும் பெலித்துவும் அடங்குவர். புனித பெர்பெத்துவா செல்வந்த குடும்பத்தில் பிறந்தவர். கிறிஸ்தவர்களாக இவர் மாறிய போதிலும் இவரது உறவினர் மாறவில்லை. 202ஆம் ஆண்டு உரோமைப் பேரரசன் கிறிஸ்தவர்களுக்கெதிராக சட்டம் நிறைவேற்றியபோது, திருமணமான பெர்பெத்துவா தன் குழந்தையுடன் சிறைப்பிடிக்கப்பட்டார். தன் குழந்தையைத் தன் தந்தையிடம் ஒப்படைத்த இவர் கிறிஸ்துவுக்காக துன்பங்களை ஏற்க தயாரானார். கொடிய மிருகங்களுக்கு இரையாக அளிக்கப்பட்ட இவர் 203ஆம் ஆண்டு வீரமரணம் எய்தினார்.

**புனித பெலிசித்து :** எளிய குடும்பத்தில் பிறந்தவர். கிறிஸ்துவ மறையைத் தழுவியதற்காக கைது செய்யப்பட்டபோது இவர் கர்ப்பிணியாக இருந்தார். சிறையில் இவர் பெற்ற குழந்தையை அதிகாரிகள் பறித்தபோதிலும் விசுவாசத்திலும் தளராமல் உயிர் நீத்தார். இவர்களது வீரமரணம் தொடக்கால திருச்சபையின் வரலாற்றில் பெரும் சாட்சியாகத் கருதப்பட்டது. இதனால் இவர்களது பெயர் 1ஆம் நற்கருணை மன்றாட்டில் இடம் பெற்றுள்ளன.

## இறைவனின்

## புனித யோவான் (துறவி)

## பங்குனி 08



புனித யோவான் 1495ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டில் எளிய பக்திமிக்க குடும்பத்தில் பிறந்தார். வீட்டில் மந்தைகளை மேய்க்கும் தொழிலைச் செய்த இவர், பின்னர் போர்வீரனாகப் பணிபுரிந்தார். தனது வாழ்வு இறைவழியை விட்டு தடம் மாறுவதை உணர்ந்த இவர் படையை விட்டு விலகினார். பலவித தொழில்களை ஆற்றிய போதிலும் இறைவழியை விட்டு விலகக் கூடாது என்று உறுதி கொண்டார். அவிலா யோவானின் மறை உரைகளினால் இவரது இறை அன்பு, பிறரன்புச் செயல்களில் அதிக ஊக்கம் காட்டி பிறருக்கும் வழிகாட்டினார். நோயாளிகளுக்குத் தனிக்கவனம் செலுத்த ஒரு சபையை நிறுவினார். 1550ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08ம் நாள் முழங்காலில் இருந்து செபித்துக் கொண்டிருக்கையில் இறைபதம் அடைந்தார்.

## புனித உரோமை நகர் பிரான்சிஸ்கோ



## மாசி 09

குடும்பத் தலைவி. துறவற சபையை நிறுவினார். 40 ஆண்டுகள் மணவாழ்வு வாழ்ந்தவர். பெரும் பணக்காரர். ஆயினும் நோயுற்றோர், ஏழைகள் மீது அன்பும், அக்கறையும் கொண்டிருந்தார்.

பஞ்சம் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் போது பொது மக்கள் தங்கிக் கொள்வதற்குகாகத் தன் நிலங்களை கையளித்தவர். இவருக்கு அநேக இறைக்காட்சிகள் அருளப்பட்டன. 1430ஆம் துறவற சபையை நிறுவினார். திருத்தந்தை 4ஆம் யூஜின் அவரது சபைக்கு அங்கீகாரம் அளித்தார். அவரது கணவன் 1436இல் இறந்தார். அதன்பின் இப்புனிதை தனது இறுதிக்காலத்தை துறவற மடம் ஒன்றில் கழித்து 1440இல் இறந்தர். 1808இல் திருத்தந்தை 5ஆம் பவுல் இவரை புனிதையாக அறிவித்தார்.

# புனித யோசேவ்வாஸ் முனிவரின் வாழ்வில் மரியாள்



பெண்ணின் மகத்துவத்தை தத்ரூபமாக விளக்குகின்ற பிரெஞ்சு பழமொழி ஒன்று இருக்கின்றது. 'Cherchez la Femme' ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு அல்லது வீர தீர செயலுக்கு பின்னாலோ ஒரு பெண் இருக்கிறாள் என்று கூறுகின்றது. இதை பின்புலமாக வைத்து, புனித யோசேவ்வாஸ், இலங்கை அப்போஸ்தலர் என வர்ணிக்கப்படுபவரின் வாழ்க்கை நீரோட்டத்தின் கண்ணோட்டத்தில் வைத்து ஆராய்ந்து பார்க்கின்றபோது அவரது சிறுபராயம் முதல் முதுமை பருவம் வரையுள்ள அவரது அனைத்து சமூக, சமய, ஆன்மீக துறையின் செயற்பாடுகளிலே ஒரு பெண்ணின் வழிகாட்டுதல் இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்தப் பெண்ணின் இடத்தை வகிப்பவள், சாதாரண மானிட பிறவி என்ற வரையறையை கடந்து புதிய ஏவாளாக வர்ணிக்கப்படும் இறைவனின் அன்னை தூய கன்னி மரியாள் என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அழிந்து போகும் நிலையிலிருந்த இலங்கைத் திருச்சபையை பாதுகாத்து, கத்தோலிக்க விசுவாசத்தை தழைத்தோங்கச் செய்ய இறைவன் புனித யோசேவ்வாஸை தெரிந்தெடுத்து எம் தேசத்திற்கு அனுப்பினார். ஆன்மாக்களின் தொண்டுக்கு தம்மை முற்றாக அர்ப்பணித்து, பல கஷ்டங்கள் மத்தியில் எம் தேச திருச்சபையை உறுதியுடன் கட்டிக்காத்தார். இவரின் இப்பணிக் காலங்களிலே அன்னை மரியாள் தனது வாழ்நாளிலே கொண்டிருந்த அனைத்து பண்புகளையும் சிறப்பாக தாழ்ச்சி, கற்பு, அமைச்சல், தேவசிநேகம், பிறர்சிநேகம் போன்றவற்றை தனது வாழ்நாள் முழுவதும் அடிபிசகாது அதே வழியில் வாழ்ந்து வந்தார். இதிலிருந்தும் கீழ்வரும் கருத்து குவியல்களில் இருந்தும் துல்லியமாக விளங்குவது யாதெனில், புனித யோசேவ்வாஸ் தன்னையும் தனது வாழ்நாளையும், அன்னை மரியிடம் ஒப்படைத்து, ஒரு குயவன் எவ்வாறு மட்பாண்டம் ஒன்றை வனைகின்றபோது அதை தட்டி நெளித்து இறுதியில் அழகிய உரு கொடுக்கிறானோ அதேபோல் அன்னை தான் தனக்கு உரு கொடுக்க வேண்டும் என்றும், தனது செயல்கள், எண்ணங்கள் யாவற்றையும் அவள்தான் நெறிப்படுத்த வேண்டும் என்றும், அவளிடம் சரணாகதி அடைந்தார்.

இவருடைய பெற்றோர் இவரது சிறு வயதிலிருந்து இவருக்கு மரியன்னை பக்தியை ஊட்டி வந்துள்ளனர் என்பதை இவரது சிறுபிராய வாழ்க்கைச் சரிதை கோடிட்டு காட்டுகின்றது. இவர் பாடசாலை மற்றும் ஆலயங்களுக்கு செல்லுகின்றவேளை திருச்செபமாலையை ஆயுதமாக கையிலேந்தி அதனை தவறாது ஜெபித்து வந்தார் என பல தரவுகள் எடுத்து காட்டுகின்றது. ஜெபமாலையை தனியாகவும் தனது சக தோழர்களுடனும் ஓதுகின்றபோது ஒவ்வொரு "அருள்நிறை" முடிவிலும் (Mary) "மரியே" என்ற நாமத்தை உச்சரித்து தலையிலே (Unction) தைலம் பூசுவார்.

தனது ஆரம்பகால குருத்துவ பணியிலே இவர் சென்ற (Kannara) கனாரா என்ற பிரதேசத்திலே அவர் கட்டிய முதல் மூன்று தேவாலயங்களையும் அன்னை மரியாளுக்கு அர்ப்பணித்து, அவள் பக்தி தேசம் முழுவதும் பரவ வேண்டும் என்ற தணியா தாகத்துடன் பணியாற்றி வந்தார். அத்துடன் இவற்றைவிட ஜெபமாலை அன்னையினதும் அமல உற்ப அன்னையினதும் பிரார்த்தனையுடன் இரண்டு பக்திச்சபைகளைத் (Confraternities) தோற்றுவித்தார்.

மறைபரப்பாளனாக இலங்கைக்கு வந்து இங்குள்ள விசுவாசிகளை சந்திக்கும் பொழுதெல்லாம் ஜெபமாலையை தன் கையிலே ஏந்திய வண்ணமும், அவர்களை ஒன்றிணைத்து வழிபாடுகளை மேற்கொண்ட பின் கழுத்தில் அணியும் அணிகலனான அட்டிகையை (nenkless)அணிந்து அவர்களை சுற்றி வலம் வருவதுண்டு. இதன் மூலம் மரியன்னையின் பக்தியை வளர்க்கவும் அதிலும் சிறப்பாக கத்தோலிக்கர்கள் என்பதை உறுதிப்படுத்தவும் இவ்வாறு செய்தார். ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு தனது அப்போஸ்தலிக்க பயணத்தினை மேற்கொள்கின்ற போதும், அப்பயணத்தில் அவ் இடத்தினில் சந்திக்கின்ற அனைத்து விசுவாசிகளையும் ஒன்றாக வரவழைத்து முதன் முதலில் தனது மறைப்பணியை அவ் இடத்தில் தொடங்கும் முன்னர் அன்னையினதும் திருச்செபமாலையை ஜெபித்த பின்னர் தான் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுப்பார். எவ்வளவு தான் பல சிரமங்கள் மத்தியில் தனது பணியினை மேற்கொண்டாலும், அக் கஷ்ரங்கள், மத்தியில் அன்னை மரியின் மீது அவர் கொண்ட அளவுகடந்த பக்தியின் நிமித்தம் சில மணி பொழுதுகளை ஒதுக்கி அவளின் மாண்பினை அகிலம் போற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் பல ஜெபங்களையும், கீர்த்தனைகளையும் அவளது நாமத்தினில் இயற்றினார். அவரது பணித்தளங்களில் அவரது சிறப்பம்சம் யாதெனில் சென்ற இடங்களிளெல்லாம் அன்னை மரியாவின் நாமத்தினை மகிமைப்படுத்தும் முகமாக அவளின் நாமத்தினில் ஒரு சிற்றாலயமாவது அமைக்க தவறவில்லை என்பது யாம் அறிந்த உண்மையாகும். ஏன்? பல சிரமங்கள், எதிர்ப்புகள் கஷ்டங்கள் மத்தியில் இலங்கையில் பணியாற்றியபோதும் அந்த இடையூறுகள் மத்தியிலும் கண்டியிலே, நாஸ்திகர்களின் மனமாற்றத்தின் அன்னைக்கென ஆலயம் ஒன்றை அமைத்தார். இதுவே அவரினால் இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது ஆலயமாகும்.

கோவா (Goa) வில் உள்ள ஒரட்டோறியன் (Oratory) சபையை சார்ந்த வண. செபஸ்ரியோ டொறேகே புனித யோசேவ்வாசைப் பற்றி எழுதிய குறிப்பேட்டிலே அன்னையின் மேல் புனித யோசேவ்வாஸ் கொண்டிருந்த அளவு கடந்த பக்தி, ஈடுபாடுபற்றி இவ்வாறு கூறுகின்றார். வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமையினையும் அன்னை மரிக்கு ஒப்புக்கொடுத்து திருப்பலி ஒப்புக்கொடுக்க தவறுவதில்லை என்றும் அவரின் பணித்தளங்களான கன்னரா இராச்சியத்திலும், இலங்கையிலும் அன்னை மரியின் பக்தியினை ஆழப்படுத்தி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கடன் திருநாட்களிலும் மூன்றாவது (திருச்செபமாலை) காரணிக்கத்தை பாடும் முறையை ஆரம்பித்து வைத்தார் எனவும் பல வேளைகளிலே மரியாளின் பிரார்த்தனையை வாசிக்கும்போது பரவச நிலையை

**ஜெபமாலையை தனியாகவும் தனது சக தோழர்களுடனும் ஓதுகின்றபோது ஒவ்வொரு "அருள்நிறை" முடிவிலும (Mary) "மரியே" என்ற நாமத்தை உச்சரித்து தலையிலே (Unction) தைலம் பூசுவார்.**

அடைந்தார். எனவும், செல்லுமிடங்களிளெல்லாம் அன்னை மரியின் பக்தியினை அறிமுகப்படுத்தி அதனை வளர்த்தெடுக்க ஆர்வத்துடன் உழைத்தார் என்றும் துல்லியமாக அக் குறிப்பேட்டிலே குறிப்பிட்டுள்ளார். மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் இவரின் வாழ்வினில் வெள்ளிடை மலையாக தோன்றியதன் காரணத்தை நாம் ஆராய்ந்து பார்க்கின்ற வேளையிலே அவர் தனக்குள்ளே அன்னை மரிக்கென ஒரு தாகத்தை ஏற்படுத்தி, தனது இதயத்துள் ஒரு இடத்தை ஒதுக்கியதன் விளைவுகளே மேற்கூறப்பட்டவையாகும். அன்னை மரியாள் இறைவனுக்கு அருகில் என்றும் இருப்பதனாலும், இறைவனது அன்னை என்பதனாலும் அவளை தனது எஜமானியாக, வழிகாட்டியாக தெரிந்து எடுத்துக்கொண்டார். அன்னை மரியின் பரிந்து பேசுதலின் மூலம் தனது வாழ்வில் ஆன்மீக விடுதலையை பெற்றுக்கொள்ளவும், அவள் இறைவனுக்கு முற்று முழுதாக தன்னை அர்ப்பணித்து கொண்டமையினாலும், தனக்கென எதையுமே பற்றிக் கொண்டிருக்காது எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணித்ததாலும், எல்லாரையும் இறைவனிடம் இழுத்து செல்வதனாலையுமே மரியாவை தனது எஜமானியாக தெரிந்து எடுத்துக் கொண்டார். எனவே புனித யோசேவ்வாஸ் தனது சிறுபிராயம் முதல் இறுதி நாள்வரையும் அன்னை மரியின் மேல் ஆழ்ந்த பக்தியும், விசுவாசமும் கொண்டு, அன்னை மரியின் ஊடாக விசுவாசிகளை இறைவனிடம் அழைத்து சென்றார் என்று கூறினாலும் அது பொய்யாகாது. அவள் மீது கொண்டிருந்த மட்டற்ற பக்தியினால்தான் தனது அப்போஸ்தலிக்க பணியை பல இடையூறுகள் மத்தியிலும் சுகமான சுமைகளாக ஏற்று வெற்றியை அடைந்தார்.

**இறையியல் கோலங்கள் 2010**

## அன்னைக்கு நான் அடிமையாதல்

**(குருத்துவ அபிஷேகம் பெற்ற சில மாதங்களின் பின் புனித யோசேவ்வாஸ் அடிகளால் எழுதப்பட்டது)**

**அன்னைக்கு அடிமையாதல் என்பது அவளைப்போல் அவள் மகன் இசேவுக்கு விருப்பமான அனைத்தையும் எவ்வேளையும் செய்ய ஆயத்தமாயிருத்தல்)**

**'நான் அன்னைக்கு அடிமையாகின்ற என்ற இந்த மடலை பார்க்கும் அனைவருக்கும் தேவதூதர்கள், மனிதர்கள், எல்லா உயிரினங்களுக்கும் அருட்திரு யோசேவ்வாஸ் அடிகளாகிய நான் இறைவனின் கன்னித்தாய்க்கு என்னை நித்தியத்திற்கும் அடிமையாக ஒப்புக்கொடுக்கிறேன் என்பது தெரியப்படுத்தப்படுவதாக! இதை நான் சுதந்திரமாகவும், முழு மனத்தோடும் எதுவித நிபந்தனையுமற்ற பக்தியின் செயற்பாடாக இந்நிலையிலிருந்து என்று மீளமாட்டேன் என்று உறுதியோடு செய்கிறேன். என்னையும் என்னிடமுள்ள அனைத்தையும் எனது எஜமானியும் தாயுமான அவளிடம் கொடுக்கிறேன். அவள் என்னையும் எனக்குள்ள அனைத்தையும் அவள் விருப்பப்படி பயன்படுத்தக்கடவாளாக. இந்த மதிப்புக்கு நான் தகுதியற்றவன் என்றே கருதுகின்றேன். இவ்வாறு நான் அவளுடைய அடிமைகளில் ஒருவனாக உள்வாங்கப்பட வேண்டிய வரத்தை பெற்றுத் தரும்படியாக எனது காவல் தூதரையும் அவளுடைய பரிசுத்த பத்தாவும் நான் தாங்குகின்ற நாமத்தையுடைவருமாகிய மகிமையுள்ள பிதாப்பிதா புனித சூசையப்பரையும் ஏனைய விண்ணகத்தில் குடியிருக்கின்ற அனைவரையும் கெஞ்சி மன்றாடுகின்றேன். இதை நான் எனது இதயத்தின் இரத்தத்தால் கையொப்பமிட்டிருக்கவே விரும்புகின்றேன். இது 1677ஆம் ஆண்டு ஆவணி 05ஆம் திகதி பனிமய மாதாவின் பெருநாள் அன்று சான்கோல் (Sancole) ஆரோக்கிய மாதா ஆலயத்தின் பீடத்தடியில் என்னால் எழுதப்பட்டது'**

**சிந்தனைக்கு : அன்று பத்து வருடங்களாக தன்னந்தனியாக இலங்கை முழுவதிற்கும் ஒரே குருவாக புனித யோசேவ்வாஸ் மரியன்னையின் அடிமையாக பணியாற்றி சத்திய வேதத்தை வளர்த்து காத்திட்டார். அதைவிட ஆயிரம் மடங்கு ஆயர்கள், குருக்கள், துறவிகளைக் கொண்ட இன்றைய இலங்கை திருச்சபையில் என்னுடைய அர்ப்பணம் எதைச் சாதித்திருக்கிறது என்பதை சிந்திப்போம்.**

## 01 இறைவனின் கொடை

கொடுக்கிறார் என்றும் கூறினார்.இயேசுவுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்ட எவரும், இவ்வுலகில், நூறு மடங்காக, வீடுகள், நிலபுலன்கள், சகோதர சகோதரிகள், இவற்றோடுகூட இன்னல்களையும் பெறுவர் என்ற நற்செய்தி திருச்சொற்களையும் குறிப்பிட்ட திருத்தந்தை, இறைவனின் கொடை சிலுவையில் முழுமையடைகின்றது என்றும் தெரிவித்தார்.

கடவுளின் முழுமை, சிலுவையில் அவர் தம்மையே முழுமையாய் வெறுமையாக்கியதில் தெரிகின்றது எனவும், தன் மறையுரையில் கூறியத் திருத்தந்தை, மகிழ்வான முகம், மகிழ்வால் நிறைந்த கண்கள் ஆகியவையே கிறிஸ்துவை முழுமையாய் பின்பற்றுகிறவரின் அடையாளங்கள் என்றும் கூறினார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## 01 மொசாட்டின் இலத்தீன்

மற்றும் பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்டனர். பிரான்சிஸ் டி அல்மேதாக கலைஞரின் வழிகாட்டலின் மருதானை புனித யோசப் கல்லூரியின் புனித சிசிலியா பாடற்குழாமின் பங்கேற்றதோடு, மேலும் உள்நாட்டு வெளிநாட்டு பாடகர்கள் மற்றும் வாத்தியக்கலைஞர்கள் கிரகரி ரொசா வழிநடத்தினார்என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 01 தூய யோசேவ்வாஸ்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் 70வது சிறுவர் தினத்தின் முக்கிய நிகழ்வாக தூய யோசேவ்வாசின் ஆடைக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வாக அமையவிருக்கின்றது. தூய யோசேவ்வாசிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இவ்வாண்டில் எமது நம்பிக்கையை உறுதிப்படுத்த தூய யோசேவ்வாஸ் வழி செல்வோம்.

## 01 கர்தினால் ஆண்டகை

எப்படியெனினும் பாரம்பரியமாக வழிநடத்தப்பட்டு வருகின்ற இவ்வகையான விழாக்களின் போது இதில் பங்குபற்றுகின்ற விசுவாசிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இடம்பெறுவதுடன் பாதுகாப்பு தொடர்பான உபகரணங்கள் பாவிக்கப்படுவதில்லை. பேருவளை சம்பவம் ஒரு உதாரணமாக இருப்பதுடன் இவ்வாறான நிகழ்வுகளின் போது பாதுகாப்புத் தொடர்பான கூட்டம், திட்டங்களை ஏற்று செயல்படும்போது பிற்காலத்தில் இவ்வகையான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கலாம்.

ஆலய திருவிழாவின் போது இதுதொடர்பான சுற்றுப்பிரகாரங்களை ஏற்பாடு செய்ய ஒரு செயற்குழுவை நியமிக்க உள்ளேன். சரியான சட்டத்திட்டங்களுக்கு அமைய செயற்பட இது உதவியாக இருக்கும் என நம்புகின்றேன். கத்தோலிக்கர்களாகிய நாம் இச்சுற்றுப்பிரகாரத்தில் பங்குபற்றி தமது வாழ்வை இழந்த எமது சகோதர சகோதரிகள் இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்று அவருடைய நித்திய இளைப்பாறுவார்கள் என்று நம்புகின்றேன். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எவ்வகையான உதவி செய்யலாம் என சிந்திப்பதுடன் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம்.

**இறையாசீர்**

**மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**பேராயர்**
**கொழும்பு உயர் மறைமாவட்டம்**

## 02 கொழும்பு உயர்...

அடிப்படையில் நிழற்பட எறியின் காட்சிப்படுத்தல் உதவியுடன் வேதாகம விசுவாச நிகழ்வுகளை மேற்கோள் காட்டி தமது தியான உரையை வழங்கினார். தொடர்ந்து நற்கருணை வழிபாடு அடிகளாரால் நடாத்தப்பட்டு நற்கருணை ஆசீர்வாதம் வழங்கலுடன் தியான முதற்பகுதி நிறைவுற்றது. அதனைத் தொடர்ந்து "குடும்பத்தில் மனமாற்றம்" "சேனையாளருக்குரிய மனமாற்றம்" என்ற இரு கருப்பொருளில் இரண்டு கட்டங்களாக இரு தியான உரைகளை அருட்சகோதரர் ஆர். ஜோசப் ஜெயகாந்தன் அவர்கள் (அதிபர் புனித சூசையப்பர் கல்லூரி) மிக சுவைபட நகைச்சுவை உணர்வுடன் சேனையாளரைக் கவரும் விதத்தில் உதாரணக் கதைகளுடன் விளக்கினார். விசேடமாக மனமாற்றம் ஏற்பட விசுவாசிகளில் ஏற்படவேண்டிய படிமுறைகள், உணர்வு மாற்றங்கள், பற்றி காணமற்போன மகன் உவமையை மேற்கோட்காட்டி விளக்கியமை சேனையாளரை வெகுவாக கவர்ந்தது. மனமாற்றம் பற்றிய தியானம் அர்த்தமுள்ளதாக மாற வாழ்க்கையில் ஏதோ ஒன்றிலாவது மனமாற்றத்தை தாமாக மேற்கொண்டு இத்தவக்காலத்தை பெறுமதியானதாக்க முடியும் என அவர் கருத்துரைத்தார். இத்தியானத்திற்குரிய அனுசரணையை சேனையாளர்களே பகிர்ந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : தங்கராசா**

## 02 சந்தியாகு...

உயர்கல்வியைக் கற்று, மலையக இளைஞர் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், தலைவருமாவார். இளம் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினருமாவார். கொழும்பு கோட்டே தொகுதியின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னாள் அமைப்பாளருமாவார். தற்சமயம் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினரும், இராஜகிரிய பங்கை சார்ந்தவருமாவார். அத்தோடு கொட்டுவே கொட பகுதியில் வாழும் சிங்கள - தமிழ் மக்களின் கல்வி, அரசியல், பொருளாதார வாழ்வாதரங்களைப் பெற்றுக்கொடுக்கும் சமூக சேவையாளராவார். அங்கிலிக்கன் சபைக்குச் சொந்தமான காணியை 125 வறிய குடும்பங்களுக்கு நான்கு பேச்சர்ஸ் வீதிம் இலவசமாகப் பெற்றுக் -கொடுத்துள்ளார். தூர தர்ஷன நோக்குடன் எடுத்த செயல்பாட்டினால் நிரந்தர வசிப்பிடமின்றி நிர்க்கதியாய் தவித்த மக்கள், தங்களுக்கென்று சொந்தக்காணி, சொந்த வீட்டு வசதியுடன் நான்காவது தலைமுறையாக, ஒரு சமூகமாக வாழ்கின்றனர்.

**தகவல் : திரு. ஞானப்பிரகாசம், இராஜகிரிய**

## 02 புனித யோசேவ்வாஸ்...

குருமுதல்வரான இறைபதம் அடைந்த அதிவணக்கத்திற்குரிய மொன்சிஞ்சோர் ரூபன் அடிகளாராகும். 1995ம் ஆண்டின் இறுதியில் அடிக்கல் நாட்டினார். 1996ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி தற்போதையை உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை திறப்பு விழாவையும், திருநாட் திருப்பலியையும் ஒப்புக்கொடுத்தார்.

முக்கியமாக இந்த ஆலயத்தை கட்டியெழுப்ப மில்லவிட்டிய புனித செபஸ்தியார் ஆலய இளைஞர் சபையினர், மறையாசிரியர் மேரி இருதயநாதன், மறைபணி நிலையத்தில் பணிபுரியும் ஜெயமேரி யோசேப் ஆகியோரின் வழிகாட்டலில் அடித்தளம் வெட்டி ஆலய கட்டிடம் எழுப்ப முழு மூச்சாக அயராது செயல்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமொன்றாகும். இந்தநேரம் மொன்சிஞ்ஞோர் ரூபன் அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுகின்றோம். உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் சுக நலனுக்காகவும், மேலும் பணிபுரியவும் புனித யோசேவ்வாஸிடம் செபிக்கின்றோம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர்,**

## XVII ரோமா த்ரே அரசு...

பொறுமையோடு உரையாடலில் ஈடுபடும் வழிகளைத் தேடுமாறும் கேட்டுக்கொண்ட, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிறருக்குத் திறந்த மனதுள்ளவராய் இல்லாதபோது, பிறரை மதிக்காதபோது, பிறரோடு உரையாடல் நடத்தாதபோது, போர்கள் நம் இதயங்களில் தொடங்குகின்றன எனவும் கூறினார். உரோம் புனித பவுல் பசிலிக்காவுக்கு அருகிலுள்ள இத்தாலிய ஆய்வுப் பல்கலைக்கழகமான ரோமா த்ரே (Roma Tre University), 1992ம் ஆண்டில், இத்தாலிய கல்வி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது. இது உரோம் நகரிலுள்ள மூன்றாவது அரசு பல்கலைக்கழகமாகும்.

## 06 நீ இன்று என்னோடு....

**லூக்கா 23:35-43**

இயேசுநாதர் சிலுவையில் அரசனாக இருந்து நீதி வழங்கினார். எப்படி? தன்னைக் கொல்பவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும் என்று அவர்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டார். இந்தக்குரலைக் கேட்காதவாறு உடையைச் சீட்டுப் போட்டுக் கொண்டனர் சிலர். அவர்களது அவதானம் இயேசுவில் இருக்கவில்லை. இங்கே சிலுவையில் தொங்குவதை மக்கள் பார்த்துக் கொண்டுநின்றார்கள்.

1. ஆட்சியாளர்களாகிய குருக்கள் "பிறரை விடுவித்தான். இவன் கடவுளின் மெசியாவும் தேர்ந்து எடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும்" என்று கேலிசெய்தார்கள்.
2. படைவீரர் அவரிடம் வந்து புளித்த திராட்சை இரசத்தைக்கொடுத்து "நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக்கொள்" என்று எள்ளி நகையாடினர்.
3. சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளி-களில் ஒருவன் "நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்துரைத்தான்.
4. ஆனால் மற்றவன் அவனைக் கடிந்துகொண்டு "கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகியிருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ப தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்று பதிலுரைத்தான். பின்பு அவன் "இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்றுவரும் போது என்னை நினைவிற் கொள்ளும்" என்றான்.

இயேசுவுக்கு அருகில் இருந்தும் இயேசுவைச் சந்தித்தபோதுதான் தான் பாவியென்று ஒருவருக்குத் தெரியத் தொடங்கும். இராயப்பருக்கும் அவ்வாறே நடந்தது. சக்கேயுவும் இயேசுவைச் சந்தித்தவுடனே மனம் மாறினான். தான் பாவியென்று அவனுக்கு விளங்கியது. ஆனால் மறு கள்ளனுக்கோ இந்த அனுபவம் கிடைக்கவில்லை. ஏன்? அவனிடத்தில் விசுவாசம் இருக்கவில்லை. ஆனால் மற்றக் கள்வனுக்கோ விசுவாசம் இருந்ததால் இயேசு குற்றமற்றவர். இவர் இறைவன். என்னை மீட்பார் என்று விளங்கிவிட்டது. இன்று நாம் எங்கிருக்கிறோம்? ஒரு கள்ளன் இயேசுவின் சிலுவைக்கு அருகில் இருந்தும் விசுவாசமில்லாததால் மனம் மாறவில்லை. மேலும் அடுத்த கள்ளனிடம் அதற்கு இயேசு அவனிடம் "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

விசுவாசத்தின் திறப்பு எது? "என்னையும் நினைவிற் கொள்ளும்" அதாவது இறைவனது ஞாபகத்தில் நாம் வீற்றிருக்கிறோமா? பொதுவாக இறைவன் எம்மைத் தமது ஞாபகத்தில் வைத்துள்ளார். ஆனால் நாம் எப்போதும் இறைவனே எமது ஞாபகத்தில் வைத்துள்ளோமா?

**மீட்பு இன்றே. இதுவே இறைவனது கணம் என்பதை மனதில் கொள்வோம்.**

## XX கத்தோலிக்கர்கள்...

இது பங்குத்தந்தையின் மேற்பார்வையின் இதில் கலந்து கொண்டனர். இதன் போது அவர் மேலும் கருத்து தெரிவித்த பொழுது எமது மறைமாவட்டத்தில் ஒரு குடும்பமாயினும் அழிந்து போக இடம் கொடுக்காமல் இறைத்திட்டத்திற்கு ஏற்ப வழிமை மிக்க குடும்ப வாழ்வு வாழ அவர்களை வழிநடத்துவது இச்செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.பங்குகளில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் ஊடாக ஏனைய குடும்பங்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த கட்டியெழுப்ப இந்த செயற்திட்டத்தின் கூடாக எண்ணுவதாகவும், மேலும் கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பணிகளில் அருட்பணி. குலோட் நோனிஸ் அடிகள் நீர்கொழும்பு வட்டார இயக்குனர் மற்றும் கட்டுவப்பிட்டிய பங்குத்தந்தை அருட்பணி ஸ்ரீலால் பொன்சேக்கா அடிகள், தில்லந்துவை பங்குத்தந்தை அருட்பணி ருவின் சந்தசிறி அடிகள், சீதுவை பங்குத்தந்தை என்டன் பிரேமலால் அடிகள், மற்றும் ஏனைய குருக்களோடு தம்மிட்ட மறைக்கல்வி பணியகத்தின் இயக்குனர் அருட்பணி. சிஸ்வான் த குருஸ் அடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## 03 தவக்காலம்

இது போன்ற புறக்கணிப்பு, உலக துன்பங்களுக்கு, பொது பிரச்சினைகளுக்கும் தனிப்பட்ட கேட்டிற்கும் ஆதாரமாக அமைகின்றது. இச்சுற்றுமடல் நமது முன்னாள் திருத்தந்தையிடமிருந்து கொடுக்கப்பட்டு இருநூறு எழுபத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. அவர் எச்சரிக்கை மணியாக கொடுத்த "பொழுதுபோக்குகள், இன்பம் நாடுதல், இலகுவான சூழ்நிலை" இன்றும் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் சில கிறிஸ்தவர்கள் எப்படி தவக்காலத்தை மிகவும் சரியான முறையில் கடைப்பிடிப்பவர்களாக உள்ளனர்?. நமது நாட்டிலும், நமது கத்தோலிக்க மதத்தில் ஒரு நிலையில்லா தன்மை நிலவுகிறது. இது நமது உள்ளங்களை ஆன்மீகத்திற்கும், கடவுளை நோக்கியும் மீண்டும் தூண்டப்பட வேண்டும். நாம் கடவுளுடைய நாளில் திருப்பலியில் பங்கேற்பதன் வழியாகவும், மேலும் தபத்தையும், நோன்பையும் கடைப்பிடிப்பதன் வழியாகவும் நம்மிடையே இவ்வுணர்வு வளர வேண்டும். திருப்பலியில் பங்கேற்பது என்பது நாம் கிறஸ்தவத்தில் வேரூன்றி இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துகின்றது. இரண்டாவதாக தபமும் நோன்பும் தான் எதிர்காலத்தின் கேள்விக்குறியாகவே உள்ளது. இறைவார்த்தை நமக்கு இதைத்தான் போதிக்கின்றது "மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அழிவீர்கள்" நினிவே மக்களைப்போல உண்ணா நோன்பிருந்து மனமாற்றத்திற்காக நாம் கடவுளை மன்றாட வேண்டும். ஏனென்றால் அவர்களின் மனமாற்றத்தாலும், உண்ணா நோன்பினாலும், கடவுள் சினம்மாறி மன்னித்தார். அவர்களை அழிக்காமல் விட்டுவிட்டார். நுகர்வுவெறிக் கலாச்சாரத்தாலும் பின் நவீனத்துவ சிந்தனையாலும் வன்முறையாலும் சிக்கிக் கொண்ட இவ்வுலகில் நமது மீட்பர் இயேசுவின் பாதை ஒரு அமைதிக்கான வழி. இவ்வுலகை நமது மனமாற்றத்தாலும், துறவினாலும் பின்பற்றுவதால் இவ்வகைப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்கும். "இதற்கு தவக்காலமே ஒரு தகுந்த காலம் தொடங்குவதற்கு"

## 12 மனித மனதில் போர்...

நம் ஒவ்வொருவரிடமும் துவங்கும் போர், நமது குடும்பங்கள், நண்பர்கள், சமுதாயம் என்ற பல நிலைகளில் பரவி, இறுதியில் உலக அளவில் தொடர்கிறது என்று வலியுறுத்திக் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எனவே, நமக்குள் உருவாகும் போரைத் தடுப்பது, அனைவருக்கும் உள்ள முதல் கடமை என்று எடுத்துரைத்தார்.

தான் ஒரு சிறுவனாக இருந்தபோது, இரண்டாம் உலகப் போரின் முடிவு அறிவிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டதையும், அவ்வேளையில் தன்னுடைய அன்னையும், அடுத்த வீட்டு அன்னையும் ஒருவரை ஒருவர் தழுவி, ஆனந்த கண்ணீர் விட்டு அழுததையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மறையுரையில் நினைவுகூர்ந்தார்.



# மகளீர்
## தியாகத்தின் கண்கள்.



பெண்கள் இறைவனால் கொடுக்கப்பட்ட உன்னதக் கொடைகள். பெண்கள் இறைவனுக்கு அடுத்தவர்கள். எனவேதான் நம் முன்னோர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என வகைப்படுத்தி ஒரு பெண்ணை தெய்வத்தோடு முன்னிலைப்படுத்துகின்றார்கள். இறைவனைப் போல அன்போடும், தியாகத்தோடும் பெண்கள் பிறருக்கு உதவி செய்கிறார்கள். தியாகத்தின் மறுவுருவமாக பெண்கள் திகழ்கின்றனர். எனவேதான் மகாத்மா காந்தி, “சேவை, தியாகம் ஆகியவற்றின் உயிருள்ள உருவமாகப் பெண் இனத்தைப் பார்க்கின்றேன்” எனக் கூறுகின்றார்.




**"சேவை, தியாகம் ஆகியவற்றின் உயிருள்ள உருவமாகப் பெண் இனத்தைப் பார்க்கின்றேன்". - மகாத்மா காந்தி.**

என்னதான் பெண்கள் தியாக உள்ளத்தோடும், சேவை மனப்பான்மையோடும் இருந்தாலும் அன்றையக் காலம் முதல் இன்றையக் காலம் வரை ஒவ்வொரு நாளும் ஒடுக்கப்பட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஆணாதிக்கமும், ஆணின் சுயநலமும் தான் காரணம். எப்பொழுது ஆண், பெண்ணை ஒரு பொருளைப் போலப் பார்த்தானோ, அன்றிலிருந்து பெண் ஒரு இச்சைப் பொருளாக, வீட்டு வேலை செய்யும் வேலைக்காரியாக, குழந்தையைப் பெற்றெடுக்கும் ஒரு கருவியாக நடத்தப்படுகின்றாள். இதற்கெல்லாம் காரணம் பெண்ணின் தியாக மனப்பான்மையை ஆண் சரியாகப் புரிந்து கொள்ளாமையே ஆகும்.

ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கப் பெண் தன் உயிரையே பணயம் வைக்கிறாள். எனவேதான் இந்தியப் பழமொழி கூறுகிறது ஆணுக்குப் போர் எப்படியோ அப்படியே பெண்ணுக்குப் பிரவசம் என்று அந்தளவுக்கு ஒரு பெண் தன் குழந்தைக்காகத் தியாக உள்ளம்தான் பெண்ணை மேன்மைப்படுத்துகின்றது.

ஆண்தான் உசத்தி, பெண் மட்டம் என்ற கருத்து இச்சமூகத்தில் பரவலாகப் பரவி இருக்கின்றது. ஆனால் இந்தக் கூற்று தவறு ஏனெனில் கடவுள் பெண்ணை ஆணின் விலா எலும்பினால் படைக்கிறார். விலாஎலும்பு என்பது ஆணின் சரிபாதியைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆகையால் விவிலிய ரீதியாக ஆண் பெண் இருவருமே சமம்.

ஆண்கள் ஆற்றலுக்கும் பெண்கள் அழகுக்கும் பெயர் போனவர்கள் என சொல்லக் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் உண்மையான இயற்கையின் தத்துவம் எதுவெனில் ஆண்கள் அழகுக்கும் பெண்கள் ஆற்றலுக்கும் பெயர் போனவர்கள். இதுதான் இயற்கை நியதி. மற்ற மிருகங்களைப் பொருத்த வரை பெண்தான் ஆணைவிடவும் உஷாராகவும், ஆற்றலோடும் செயல்படுகின்றது.

உதாரணமாக ஆண்புலியை விட பெண் புலி சிறந்த வேட்டைக்காரி. ஆண் சிலந்தியை விட பெண் சிலந்தி பெரியது. ஆண் பாம்பை விட பெண் பாம்பு அதிக விஷமானது. அவ்வளவு ஏன்? மழைக்காலம் வந்தாலே நம்மை எல்லாம் கடித்தே பாடாய்ப் படுத்துகின்ற கொசு, அதில்கூட ஆண் கொசு அப்பிராணி, கடிக்காது, பெண்கொசுதான் கடித்து, மலேரியா கிருமிகளை மனிதர்களுக்கு விநியோகம் செய்கிறது. அந்த அளவுக்கு வலிமையும் ஆற்றலும், விவேகமும் கொண்டதுதான் பெண் இனம். ஆனால் ஏன் மனித வர்க்கத்தில் மட்டும் பெண் வீரியம் குறைந்தவளாக காணப்படுகின்றார்கள். உண்மையிலே வீரியம் குறைந்தவளா? அல்லது காரணத்தோடு பலவீனமாக்கப்பட்டுள்ளார்களா? என்பது நாம் சிந்திக்க வேண்டிய உண்மை.

ஆணைவிடப் பெண்கள் பலசாலிகள், மனத்துணிவும், சகிப்புத் தன்மையும், தியாக உள்ளமும் கொண்டவர்கள். உடலால் மட்டுமல்ல, மரபணுவாலும் பெண்கள் பலசாலிகள். பெண்களுக்கு இருக்கும் அந்தக் கொசுறு x குரோமோசோம் அவளைச் சுலபமாகப் பிறக்கவும், சீக்கரமாக நடக்கவும், பேசவும் குறைவாக் நோய்வாய்ப்படவும் கொஞ்சமாக ஓய்வு எடுக்கவும் வைக்கின்றது. ஆண்களைவிடப் பெண்களுக்குத் தான் ஆயுட்காலம் அதிகம் என்பதை அறிவியல் சான்றுகள் சுட்டிக் காட்டுகின்றது. வேட்டையாடியப் பெண் வேலைக்காரியாக மாறியதன் காரணம் என்ன? என்பதை நம் ஒவ்வொருவரும் சிந்திக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

ஆணின் சுயநலம்தான் பெண்ணை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் ஒடுக்குகின்றது. பெண்ணின் தியாகத்தையும், அன்பையும் ஆண்தான் சுயநலத்திற்காகப் பயன்படுத்தினான். எனவே காலப்போக்கில் பெண் ஆணிற்கு பணிவிடை செய்யவே படைக்கப்பட்டிருக்கின்றோம் என்று தன்னையே சிறிது சிறிதாக மாற்றிக் கொண்டாள். அதன்பின் தியாகம் என்ற பெயரில் அடிமையானாள். ஆணைப் போல பெண்ணும் இச்சமூகத்தில் சமஉரிமையும், முழுச் சுதந்திரமும் பெற்று செயல்பட்டாலும் இன்னும் ஆணாதிக்கமும், பெண்ணடிமைத்தனமும் மேலோங்கிக் கொண்டேதான் இருக்கின்றது. இத்தகைய அவல நிலையை ஒழிக்கப் பெண் தாயிடமிருந்து பிறந்த நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றோம். அதற்கு நாம் செய்ய வேண்டிய பலவற்றில் ஒரு சிலவற்றை இப்போது காண்போம் வாருங்கள்.

பெண்ணின் தியாக உள்ளத்தை மதிக்க வேண்டும். அவர்களின் அன்பையும், தியாகத்தையும் சுயநலத்தோடு எதிர்கொண்டு பெண்களை அடிமைகளா மாற்ற நினைக்கக்கூடாது. மாறாக, மாமனிதர்களாகப் போற்ற வேண்டும். எந்தப் பணியிலும் பெண் இணைந்தாலன்றி நாடும் புனிதமாகாது, வாழ்வும் புனிதமாகாது என்ற அறிஞர் ராய்கின் கூற்றுப்படி நம் நாடும் நம் வாழ்வும் புனிதமடைய பெண்ணின் இயல்பை மதித்து அவர்கள் எல்லாத் துறையிலும் வெற்றிப் பெற்று வலம் வர நாம் தட்டிக் கொடுக்க வேண்டும்.

அறிவின் தாயகமாய் அருள் நிறைந்த உள்ளமாய் இருப்பவள் பெண் என்று ஜெயகாந்தன் கூறுவதுபோல் பெண்ணின் அறிவையும் அருள்நிறைந்த உள்ளத்தையும் இச்சமூகம் பயன்படுத்தும் பொழுது மனிதம் உயர்த்தப்பட்டு மாண்படையும். பெண் என்பவள் பிள்ளைப் பெறும் இயந்திரம் அல்ல. உணர்வுகளும் உணர்ச்சிகளும் உள்ள ஒரு உயிர் என்று மகான் கூறுவது போல பெண்ணை குழந்தைப் பெற்றெடுக்கும் இயந்திரமாகக் பார்க்காமல் தியாகத்தின் மறுவுருவமாகப் பார்க்கவேண்டும்.

ஆண்களுக்கு வீரமும், புகழும், மதிப்பும் அளிப்பது பெண்களே என மகாபாரதமும் சுட்டிக் காட்டுவது போல பெண்தான் ஆணுக்கு நல்ல ஒரு தாயாகவும், தோழியாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், ஆசிரியராகவும், மருத்துவராகவும், ஆலோசகராகவும் இருந்து பல்வேறு வெற்றிகளைப் பெற வழிகாட்டுகின்றார். எனவே, வாழ்க்கையின் விளக்கமாகவும், வழிகாட்டியாகவும் ஒளி வீசுகின்ற தியாக உள்ளம் நிறைந்த பெண்ணை மதித்துப் போற்றி ஒரு முன்னுதாரணமாக தாயிடம் பிறந்த ஒவ்வொருவரும் கொண்டிருப்போம். அப்பொழுது இவ்வுலகமே நாம் கொண்டாடுகின்ற பெண்கள் தினவிழாவில் பெண்கள் தியாகத்தின் கண்கள் என பறைசாற்றி மகிழந்திடும்....!




- பெண் புடவை கட்டினாலும் கற்பழிக்கப்படுகிறாள்.
- அவள் சுடிதார் உடுத்தினாலும் கற்பழிக்கப்படுகிறாள்.
- அவள் பர்தா போட்டாலும் கற்பழிக்கப்படுகிறாள்.
- **பெண்ணின் உடையிலும் பிரச்சனை இல்லை...!**
- பெண் ஏழு வயதிலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் பதினேழு வயதிலும் கற்ப்பழிக்கபடுகிறாள்,
- அவள் எழுபது வயதிலும் கற்பழிக்கப்படுகிறாள்.
- **பெண்ணின் வயதிலும் பிரச்சனை இல்லை.**
- பெண் இந்துவாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் முஸ்லீமாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் கிறிஸ்தவராக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- **பெண்ணின் மதத்திலும் பிரச்சனை இல்லை.**
- பெண் தாயாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் மனைவியாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் சகோதரியாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்.
- **பெண்ணின் உறவிலும் பிரச்சனை இல்லை.**
- பெண் தமிழச்சியாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் பலமொழி பேசினாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் ஆங்கிலம் பேசினாலும் கற்பழிக்கப்படுகிறாள்.
- **பெண்ணின் மொழியிலும் பிரச்சனை இல்லை.**
- பெண் கருப்பாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் வெள்ளை இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்,
- அவள் கொள்ளை அழகாக இருந்தாலும் கற்பழிக்கப்படுகிறாள்.
- **பெண்ணின் நிறத்திலும் பிரச்சனை இல்லை.**

**அப்போ எங்கு தான் பிரச்சனை..???**

**சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்**
**இல்லையேல் நாம் திருந்த வேண்டும்.**
**சமூகத்தின் மீதும் பெண்கள் மீதும்**
**ஏன் பழிப்போட வேண்டும்.**
**ஆண்களுக்கு பெண்களை விட வலிமையை தந்து**
**இருப்பது அவளை காக்கவே தவிர பறிக்க அல்ல.**
**பெண்களை தாயாக சகோதரியாக பார்க்காவிட்டாலும்**
**அவர்களை காமமாக பார்க்காதீர்கள்.**

**இந்த எழுத்துக்கள் கண்ணீர் சிந்தும் என் கண்மணிகளான சகோதரிகளுக்கு சமர்ப்பணம்.**

**சிந்தியுங்கள்..... செயல்படுங்கள்.**

நன்றி முகநூல்



**மகளீர் தின நல்வாழ்த்துக்கள்**

## உலக மகளீர் தினம்



**நதியும் பெண்ணாய்**
**நாடும் தாயாய்**
**நிலவும் குமரியாய்**
**நீல்கடலும் அவளாய்**

**மொழிகளில் நீயாய்**
**முப்பெரும் தேவியாய்**
**பூக்களுக்கும் பெயராய்**
**பூமியும் இவளாய்**

**மகளிர் தினம் மட்டுமல்ல**
**மானுடம் உள்ளமட்டும்**
**வாழ்த்துகின்றோம்**
**பெண்ணே உன்னை!**
**வாழ்த்துகின்றோம்**
**முன்னே உன்னை!**

# அன்னை மரியாவின் மாசற்ற இதயத்திற்கு இங்கிலாந்து அர்ப்பணிப்பு






இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதியை அன்னைமரியாவின் திரு இதயத்திற்கு அர்ப்பணிப்பதாக அறிவித்தார், வெஸ்ட்மின்ஸ்டர் பேராயர், கர்தினால் வின்சென்ட் நிக்கோல்ஸ் போர்த்துக்கல்லின் பாத்திமா நகரில் அன்னைமரியா காட்சியளித்ததன் 100ம் ஆண்டையொட்டி, பாத்திமா அன்னை திரு உருவம், லண்டனுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், சனிக்கிழமை வெஸ்ட்மின்ஸ்டர் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதியை அன்னை மரியாவின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிப்பதாக அறிவித்தார், கர்தினால்.

திருப்பலிக்குப்பின், வெள்ளிமுலாம் பூசப்பட்ட மகுடத்தை அன்னை மரியாவின் திரு உருவத்திற்கு அணிவித்த கர்தினால் நிக்கோல்ஸ் அவர்கள், அன்னை மரியாவைக் குறித்து நாம் என்ன அறிந்துள்ளோம் என்பதையொட்டியும், அன்னை மரியா நம்மிடம் என்ன கூற விரும்புகிறார் என்பதையொட்டியுமே, இயேசுவின் சீடர்களாக நாம் செயல்படுவதற்குரிய பாதை அமைந்துள்ளது என மேலும் கூறினார்

# பாத்திமா திருத்தூதுப் பயணத்தின் இலச்சினை வெளியீடு

இவ்வாண்டு வைகாசி மாதம் 12, 13 ஆகிய நாள்களில் பாத்திமா திருத்தலத்தில் கொண்டாடப்படும் முதல் நூற்றாண்டு விழாவையும், இத்தருணத்தையொட்டி, திருத்தந்தை மேற்கொள்ளும் திருத்தூதுப் பயணத்தையும் இணைத்து, அத்திருத்தலம், உருவாக்கியுள்ள இலச்சினையை, திருப்பீட செய்தித் தொடர்பகம், வெளியிட்டது.

எளிமையை விரும்பும் திருத்தந்தையின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில், எளிய முறையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த இலச்சினையை, தீனோ சாந்தோஸ் (Dino Santos) என்ற கலைஞர் உருவாக்கியுள்ளார். மரியாவின் மாசற்ற இதயம் என்ற மையப்பொருளை வெளிப்படுத்தும் வகையில், செபமாலையின் மணிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஓர் இதயம் இந்த இலச்சினையின் மையமாகவும், அதற்குக் கீழே, பாத்திமா திருத்தல பசிலிக்காவும் பதிக்கப்பட்டுள்ளன.

இந்த நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் மையப்பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, “நம்பிக்கையின், அமைதியின் திருப்பயணியான மரியாவுடன்” என்ற சொற்கள், இந்த இலச்சினையில் இடம்பெற்றுள்ளன.

இதற்கிடையே, பாத்திமாவில், அன்னை மரியா வழங்கிய காட்சிகளில் பங்கேற்ற மூவரில் ஒருவரான, லூச்சியா தோஸ் சாந்தோஸ் (Lucia dos Santos) அவர்களை, புனிதர் நிலைக்கு உயர்த்தும் ஆய்வுகளின் தொகுப்பினை, போர்த்துக்கல் நாட்டின் கோயிம்ப்ரா மறைமாவட்டம் நிறைவு செய்துள்ளது என்று அம்மறைமாவட்டம் அறிவித்துள்ளது.

கோயிம்ப்ரா புனித தெரேசா கார்மேல் துறவு மடத்தில், ஓர் அருள் சகோதரியாக வாழ்ந்து, 2005ம் ஆண்டு, தன் 97வது வயதில் இறையடி சேர்ந்த லூச்சியா தோஸ் சாந்தோஸ் அவர்களைக் குறித்த விவரங்கள் அடங்கிய 15,000த்திற்கும் அதிகமான பக்கங்கள், வத்திக்கானுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று, கோயிம்ப்ரா ஆயர், Virgilio Antunes அவர்கள், செய்தியாளர்களிடம் கூறினார்.




பாத்திமாவில், அன்னை மரியா வழங்கிய காட்சிகளில் பங்கேற்க வரம்பெற்ற மூவரில், பிரான்ஸிஸ்கொ மற்றும் ஜசிந்தா ஆகிய இருவரையும், திருத்தந்தை புனித 2ம் ஜோன்போல் அவர்கள், 2000மாம் ஆண்டில், அருளாளர்களாக உயர்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வருகிற ஞாயிறு, Ponte di Nona பங்குக்கோவிலில் திருத்தந்தை



மாசி 19, ஞாயிறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் நகரின் Ponte di Nona எனுமிடத்தில் உள்ள, இயேசுவின் திரு இருதய, புனித மரிய யோசேப்பா பங்குக் கோவிலில் திருப்பலி நிறைவேற்ற செல்வார் என்று உரோம் மறைமாவட்டம் அறிவித்துள்ளது.

ஞாயிறு மாலை 4 மணியளவில் அப்பங்குதளத்திற்குச் செல்லும் திருத்தந்தையை, கர்தினால் அகோஸ்தீனோ வல்லினி அவர்கள் வரவேற்றபின், திருத்தந்தை, அங்கு கூடிவரும் சிறுவர், சிறுமியர், இளையோர், மற்றும் நோயுற்றோரை, தனித்தனியே சந்திக்கிறார்.

பங்குக்கோவிலில் ஒரு சிலருக்கு ஒப்புரவு அருளடையாளம் வழங்கியபின், திருத்தந்தை, அங்கு ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றுகிறார். இதே பங்குத்தளத்திற்கு, 2001ம் ஆண்டு, மார்கழி 16ம் திகதி, திருத்தந்தை புனித 2ம் ஜோன்போல் அவர்கள் வருகை தந்தபோது, அவர் வழங்கிய ஒரு சிலுவை, கோவிலின் பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றபின், உரோம் மறைமாவட்டத்தின் 12 பங்குகளைச் சேர்ந்த மக்களை இதுவரை சந்தித்துள்ளார் என்பதும், 2017ம் ஆண்டு, திருத்தந்தை மேற்கொள்ளும் இரண்டாவது பங்கு சந்திப்பு இது என்பதும் குறிப்பிடத்தக்கன.

# ரோமா த்ரே அரசு பல்கலைக்கழகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ்




புலம்பெயர்ந்த மக்கள், ஐரோப்பிய கலாச்சாரத்திற்கு ஆபத்தாக இல்லை, ஆனால், அம்மக்கள், சமுதாயங்கள் வளர்வதற்கு, சவாலாக உள்ளனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 17.02.2017 வெள்ளியன்று, இத்தாலிய பல்கலைக்கழக மாணவர்களிடம் கூறினார். உரோம் நகரிலுள்ள, ரோமா த்ரே என்ற, மூன்றாவது அரசு பல்கலைக்கழகத்திற்கு, வெள்ளி காலை பத்து மணியளவில் சென்று, ஏறக்குறைய இரண்டு மணி நேரம் அங்கிருந்து, மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார், திருத்தந்தை பிரான்சிஸ். கடந்த ஆண்டில், கிரேக்க நாட்டின் லெஸ்போஸ் தீவைப் பார்வையிட்ட பின், அங்கிருந்து அழைத்து வந்த சிரியா நாட்டு புலம்பெயர்ந்த பெண் Nour Essa அவர்கள், தற்போது, இத்தாலிய அரசின் உதவியுடன், இப்பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார்.

சிரியா மற்றும், ஈராக் நாடுகளின் புலம்பெயர்ந்த மக்கள், ஐரோப்பிய கிறிஸ்தவக் கலாச்சாரத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளனரா? என்று கேட்டதற்குப் பதிலளித்த திருத்தந்தை, தனது அர்ஜென்டீனா நாடும், குடியேற்றதாரர்களால் நிறைந்தது எனவும், குடியேற்றம் ஆபத்தாக இல்லையெனவும் தெரிவித்தார்.

மேலும், ரோமா த்ரே பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும், பணியாளர்களையும் சந்தித்தார் திருத்தந்தை. அச்சந்திப்பில் உரையாற்றிய திருத்தந்தை, அரசியல்வாதிகள், தங்களின் வாக்குவாதங்களைக் குறைத்து, ஒருவரை ஒருவர் புண்படுத்துவதை நிறுத்தி, உரையாடலுக்குத் திறந்த மனதுள்ளவர்களாய் செயல்படுமாறு கூறினார். 45 நிமிடங்கள் ஆற்றிய இந்த உரையில், ஒருவரை ஒருவர் அவமதிப்பது, சாதாரண ஒரு காரியமாக மாறியுள்ளது, எனவே, பேச்சுக்களைக் குறைத்து, பிறருக்குச் செவிமடுப்பதை அதிகரிக்குமாறு கேட்டுக்கொண்டார், திருத்தந்தை.

குடியேற்றதாரருக்கு எதிரான இயக்கங்கள் குறித்தும் எச்சரித்த திருத்தந்தை, புதிதாக நாட்டுக்கு வருகிறவர்களை, உடன்பிறந்த சகோதர, சகோதரிகளாக நடத்துமாறும் வலியுறுத்தினார்....

தொடர்ச்சி 15ம் பக்கம்




# திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“நாமும் அந்நியர் என்பதை நினைவுபடுத்தி புலம்பெயர்ந்தவர் மற்றும், வெளிநாட்டவரை நாம் வரவேற்க வேண்டுமென்று விவிலியத்தில் நம் ஆண்டவர் எத்தனைமுறை கேட்டுள்ளார்!”

“பொருளளவிலும், ஆன்மீகத்திலும் நிலவும் வறுமைக்கு எதிரான சண்டையில் இணைவதற்கு உங்களை அழைக்கிறேன். நாம் ஒன்றாகச் சேர்ந்து அமைதியையும் நட்பு பாலங்களையும் கட்டுவோம்”

“இயேசு விண்ணகத்தின் திறவுகோலை பேதுருவிடம் கொடுத்தது விண்ணகத்தைத் திறப்பதற்காக மட்டுமே அதை மூடுவதற்காக அல்ல”

“நம் தேவைகளை நம்மைவிட கடவுள் நன்றாக அறிந்திருக்கிறார் கடவுளின் வழிகளிலிருந்து நம் வழிகள் வேறுபட்டவை என்பதால் நாம் அவரின் வழிகளில் நம்பிக்கை வைக்க வேண்டும்”

“இளமைத் துடிப்புள்ள ஓர் இதயம் அநீதியைச் சகித்துக்கொள்ளாது புறக்கணிப்புக் கலாச்சாரத்திற்குத் தலைவணங்காது மற்றும் உலகமயமாக்கப்பட்ட புறக்கணிப்பிற்கு தன்னை உட்படுத்தாது”

“நம் பலவீனங்களின் சுமைகளை தன்மீது ஏற்றுக்கொண்டு நாம் நம் வாழ்வை வலிமையோடு மீண்டும் பொறுமையுடன் தொடங்குவதற்கு ஆண்டவர் உதவுகிறார் என்பதை அறிவது நல்லது”

“இறைவனுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்காதிருப்போம். நம்மை இறைவனிடம் முழுமையாக ஒப்படைப்பது என்பது அவரிடம் எவ்வித முன்நிபந்தனைகளும் வைக்காமல் அவரின் திட்டத்துக்குள் நுழைவதாகும்“


'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்



# உள்ளத்தை தொடும் போதனைகள்

வாழ்விற்கு புதிய வழிமுறைகள்

அதிகாரம் 01



## 05. உலகின் உப்பு, ஒளி

**மத் 5:13** நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும் வேறு ஒன்றுக்கும் உதவாது.

**மத் 5:14** நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது.

## 07. ஒருவரும் இரண்டு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய இயலாது

**மத் 6:24** எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.

## 06. கடவுளை தாராள குணத்தில் விஞ்ச முடியாது

**லூக் 18:28** பேதுரு அவரிடம், "பாரும், எங்கள் உடைமைகளை விட்டுவிட்டு நாங்கள் உம்மைப் பின்பற்றினோமே" என்றார்.

**லூக் 18:29** அதற்கு அவர் அவர்களிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் இறையாட்சியின் பொருட்டு வீட்டையோ மனைவியையோ சகோதரர் சகோதரிகளையோ பெற்றோரையோ பிள்ளைகளையோ விட்டுவிட்டவர் எவரும்

**லூக் 18:30** இம்மையில் பன்மடங்கும் மறுமையில் நிலைவாழ்வும் பெறாமல் போகார்" என்றார்.

விளக்கம் : பிளவுபட்ட இதயத்தோடு கடவுளுக்கு பணி புரிவது இயலாது என்பது வலியுறுத்தப்படுகிறது. கடவுளை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்து அவருக்கு பணி புரிய ஒருவர் முடிவு எடுப்பது அவசியம். இதனால் மற்றவை அனைத்தையும் கடவுளுக்குக் கீழ்க் கொண்டு வருகிறார். பணம் அல்லது செல்வம் ஒருவருடைய வாழ்க்கையில் முதலிடத்தை எடுக்க முடியும்.

## 8. நல்ல மனது

**மத் 6:27** "விபசாரம் செய்யாதே" எனக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

**மத் 6:28** ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று.

**மத் 6:29** உங்கள் வலக்கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள். உங்கள் உடல் முழுவதும் நரகத்தில் எறியப்படுவதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை நீங்கள் இழப்பதே நல்லது.

**மத் 6:30** உங்கள் வலக்கை உங்களைப் பாவத்தில் விழ செய்தால் அதையும் உங்களிடமிருந்து வெட்டி எறிந்து விடுங்கள். உங்கள் உடல் முழுவதும் நரகத்திற்குச் செல்வதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை நீங்கள் இழப்பதே நல்லது.

**மத் 6:31** "தன் மனைவியை விலக்கி விடுகிறவன் எவனும் மணவிலக்குச் சான்றிதழைக் கொடுக்கட்டும்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

**மத் 6:32** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் எவரும் தம் மனைவியைப் பரத்தைமைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கிவிடக் கூடாது. அப்படிச் செய்வோர் எவரும் அவரை விபசாரத்தில் ஈடுபடச் செய்கின்றனர். விலக்கப்பட்டோரை மணப்போரும் விபச்சாரம் செய்கின்றனர்.

**மத் 6:33** மேலும், "பொய்யாணை இடாதீர். ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்துவீர்" என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

**மத் 6:34** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனென்றால் அது கடவுளின் அரியணை.

**மத் 6:35** மண்ணுலகின் மேலும் வேண்டாம் ஏனெனில் அது அவரின் கால்மணை. எருசலேம் மேலும் வேண்டாம் ஏனெனில் அது பேரரசரின் நகரம்.

**மத் 6:36** உங்கள் தலைமுடியின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனெனில் உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது.

**மத் 6:37** ஆகவே நீங்கள் பேசும்போது "ஆம்" என்றால் "ஆம்" எனவும் "இல்லை" என்றால் "இல்லை" எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது.

விளக்கம் : செயல் அளவிலிருந்து கருத்து நிலைக்குச் செல்கிறார் இயேசு. விபசாரம் பெரும் தீமையான செயல். அது அநீதியாகவும், கற்புக்கு எதிராகவும் உள்ளது. இருப்பினும் அது பற்றிய எண்ணங்கள் தவறானதாக மட்டுமே கருதப்படுகிறது. ஆனால் இயேசுவின் பார்வையில் கருத்தளவிலும் விபசாரம் இருப்பதாக அறிவிக்கிறார். மேலும் இயேசு உவமானங்கள் வழியாக நம் வாழ்வில் மதிப்பீட்டுப் பட்டியலை மாற்றியமைக்க அழைக்கிறார்.

**"இயேசு நூற்றுவர் தலைவனை நோக்கி "நீர் போகலாம். நீர் நம்பிய வண்ணமே உமக்கு நிகழும்" என்றார் (மத்தேயு 8:13)"**

அன்புச் சகோதரிகளே, திருவிவிலியத்தில் நம்பிக்கைக்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். ஆனால் ஆணித்தரமாக கூறப்படுவது ஆபிரகாமின் நம்பிக்கையைத்தான். நம்பிக்கை தளரும்போது நம் உடலும், மனமும் சோர்ந்து போகிறது. மனிதன் மேல் வைத்த நம்பிக்கை எந்த நேரத்திலும் மாறலாம். இறைவன் மேல் வைக்கும் நம்பிக்கை நம்மை கரம்பிடித்து வழிநடத்தும், ஆனால் முழுமையாக நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

சமீபத்தில் நடக்கும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகளை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். நான் சமீபத்தில் முக நூலில் ஒரு காட்சியைப் பார்த்தேன். இறைவன் உனக்கு முன் தூதரை அனுப்புவார் என்பதை குறிப்பதுபோல் இருந்தது அந்தப் பெண்ணையும் தந்தையையும் இளைஞர்கள் தாக்கும் போது ஒரு மாடு வந்து அவர்களை முட்டி விரட்டியடிக்கிறது. சகோதரிகளே, அந்த பெண் என்ன நினைத்திருப்பாள்? என்பது இறைவனுக்குத்தான் தெரியும். நீ வருந்தி வருந்தி அழைத்தாலும் வரமுடியாதவை வரமாட்டாது. உன்னோடு ஒட்டிக்கொள்பவை போகச் சொன்னாலும் போகாது.

நினைத்த நினைத்து அழுவதேன்! சகோதரிகளே! எனவே துயரங்களை ஒரு தவம்

ng z ]N z xU epkpl k;!

என்று எண்ணுவோம். துயரங்கள் மூலம் அனுவங்களைச் சேகரிப்போம். இதுதான் உலகம் என்று முடிவு செய்து சோர்ந்து போய் நம்பிக்கையை இழந்துவிடாதே. வாழு வாழவிடு! யானைக்கு தும்பிக்கை என்ன பலமோ.. அதுபோல் நம்பிக்கைதாம் நம் அனைவருக்கும் பலம். அதே நம்பிக்கையில் வாழ அன்னையிடம் உருக்கமாக வேண்டுவோம்.



# இரத்தினபுரி மறைமாவட்டத்தில் புனித யோசேவ்வாஸ் ஆண்டு பிரகடனப்படுத்தல்.



இறை இரக்கத்தின் ஆண்டை நிறைவு செய்து கொண்டு புனித யோசேவ்வாஸ் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். கடந்த 2017.01.15 ஞாயிறன்று இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு. கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா (O.S.B.) ஆண்டகை இரத்தினபுரி புனித இராயப்பர் - சின்னப்பர் பேராலயத்தில் திருப்பலியுடன் பிரகடனம் செய்து வைத்தார். திருப்பலியில் பங்குத் தந்தை அருட்பணி. சுரங்க பெர்ணான்டோ அடிகளாரும், உதவிப்பங்குத் தந்தை அருட்பணி சம்பத் விஜேரட்ண அடிகளாரும் திருப்பலியில் கலந்து ஒப்புக்கொடுத்தனர்.

ஆயர் தமது உரையில் புனித யோசேவ்வாஸ் மிக விசுவாசத்துடன் செயல்பட்ட ஒருவர் அவர் இலங்கைக்கு வருகை தந்தமையால் தான் இன்று எமது நாட்டில் கத்தோலிக்க சமயம் இருக்கிறது. எனவே, நாமும் புனித யோசேவ்வாசைப்போல விசுவாச வாழ்வு வாழ்ந்து எமது பிள்ளைகளையும் அவ்வழியில் வழி நடத்த முயற்சிப்போம் என்று கூறினார்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

# பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஆற்றும் ஊடகவியற் பணி மகத்தானது பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் முதலாவது பட்டமளிப்பு விழாவில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை






இந்தியாவின் பெயர்போன பல்கலைக்கழகத்தின் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமான பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் 2012 - 2016 கல்வியாண்டுகளில் ஊடகக்கற்கை இளங்கலைமாணி மற்றும் ஊடகக்கற்கை முதுகலைமாணி கற்கைநெறியினை நிறைவு செய்த 11 மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா மாசி 22, 2017 அன்று இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வின் பிரதம விருந்தினராக மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராம் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் பத்திரிசியார் கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்க தலைவரும் லண்டன் கொட்டேல் மரியா உரிமையாளருமான திரு.திருமதி அருளானந்தம் ஜெயராசா யசிந்தா புஸ்ப்பம் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வின் தலைவாரக ஜீவேந்திரா போல் அ.ம.தி அடிகளார் செயலாற்றினார்.

**2012 – 2015**

ஊடகக்கற்கை இளங்கலைமாணி மாணவர்கள் பட்டம் பெற்றவர்கள்

1. அருந்தவச்செல்வன் அனித்டிறொக்சன்
2. அல்பேட் பஸ்ரியன்
3. சுந்தரம்பிள்ளை ராஜேஸ்கரன்
4. வெற்றிவேல் துஸ்யந்தன்
5. அல்பிறெட் பொறிஸ்பெக்கர்
6. தயாராணி துரை
7. கிறிஸ்துராசா ஜெகன்
8. க.ஆன் நிரோஜா
9. சுஜிதா துரைராஜன்

**2015 – 2016**

ஊடகக்கற்கை முதுகலைமாணி மாணவர்கள்

1. அருள்திரு பாலதாஸ் - பிரையன் இறையியல் இளங்கலைமாமணி உறுபாணியா உரோம்.
2. நித்தியானந்தன் - கஜிதரன் ஊடக இளங்கலைமாணி யாழ் பல்கலைக்கழகம்

*தகவல்*
*அருட்பணி நூபன் மரியாம்பிள்ளை அடிகளார்*



கொழும்பு 15, மட்டக்குளி புனித மரியாள் ஆலயத்தில் திருப்பாலத்துவ சபை தினம் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்றைய திருப்பலியை கிளரீசியன் சபையின் மாகாண முதல்வர் அருட்பணி. ரெக்ஸ் கொண்ஸ்டன்டைன் அடிகளார் சிறப்பித்தார். திருப்பலி முடிவில் மாணவர்கள் மற்றும் திருப்பாலத்துவ சபையின் ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் இணைந்து பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் லொயிட், அமதி. அடிகளாருடன் குழுப்புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

**தகவல் : திருமதி குளோரி, ஊக்குவிப்பாளர்.**

# தவக்கால தியானம்

களுத்துறை மறைக்கோட்ட கத்தோலிக்க மக்களுக்காக ஒருநாள் தவக்கால தியானம் வருகிற 12.03.2017 அன்று போயாதினம் ஞாயிற்றுக்கிழமை ஹொரனை புனித மார்டீன் டீ போரஸ் தேவாலய கல்வாரியில் காலை 9.30 - 4.30 மணி வரை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையில் தலைமையில் நடைபெற உள்ளது.

*ஏற்பாடு*
*தமிழ் கத்தோலிக்க மறைபரப்பு வலயம்*
*கொழும்பு உயர் மறைமாவட்டம்*
*தொடர்புகளுக்கு புனித மரியாள் ஆலயம்*
*மத்துகமை : 0770090005*

# கத்தோலிக்கர்கள் மேல் நீதிமன்றத்தின் வழியாக வருடத்திற்கு 350ற்கும் மேல் விவாகரத்து பெற்றுக் கொள்கின்றனர்.





கிறிஸ்தவ குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை கர்தினால் ஆண்டகை எடுத்துக்கூறினார்.

இன்று எமது கிறிஸ்தவ குடும்ப வாழ்வில் பலவிதமான குழப்ப மிக்க தன்மை ஏற்பட்டுள்ளது. 1960ஆம் ஆண்டு மற்றும் 70ஆம் ஆண்டுகளில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள குடும்ப நீதிமன்றத்திற்கு வருடாந்தம் 10 குடும்பங்கள் மட்டுமே விவாகரத்துப் பெற வருகை தந்தனர் ஆயினும் தற்போது இந்நிலை 350ஆக உயர்வடைந்துள்ளது. கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ஆண்டகை கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பு தம்மிட்ட தோமஸ் கருதினால் குரே மறைக்கல்விப் பணியகத்தில் நடைபெற்ற குடும்ப ஒன்றுகூடலின்போது இக்கருத்தை தெரிவித்தார். மேலும் கூறுகையில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ குடும்பங்களை வலிமைமிக்கதாக கட்டியெழுப்புவதை நோக்கமாக கொண்டு மறைமாவட்டம் முழுவதும் வட்டாரப் பங்கு மட்டத்தில் குடும்ப பணிக்குழு ஒன்றை நியமிக்கும் வேளைத்திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் கட்டானை வட்டாரங்களில் உள்ள பங்குகளில் தெரிவு செய்யப்பட்ட தம்பதியர்கள் பெரும் எண்ணிக்கையானோர்.... -

15

# கரித்தாஸ் நிறுவனத்தின் செய்திகளை அறிந்து கொள்வதற்கான உரிமை

அன்மையில் வெளியிடப்பட்ட செய்திகளை அறிந்து கொள்வதற்கான பற்றிய கலந்துரையாடல் 2017ஆம் ஆண்டு பங்குனி 09ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 2.30 மணிக்கு இலங்கைக்கான கரித்தாஸ் நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறும்.


வழக்கறிஞர் கிரிஷானி பிண்டோ ஜயவர்தன இதனை முன்னெடுத்து செல்வார் இவருடன் இணைந்து சட்டரீதியான ஆய்வாளர் மதுரி தமிழ்மாறன் பங்குபற்றுவார். இச்செயற்பாட்டிற்கு செடெக் நிறுவனத்தின் தலைவரும் கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியானி பர்னாந்து ஆண்டகை அவர்களும் தலைமைத் தாங்குவார். இப்பொது கலந்துரையாடல் செடெக் நிறுவனத்தின் சமூக நீதி மற்றும் சமாதான செயற்பாட்டின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மின்னஞ்சல்
cgnanaoli@yahoo.com
இணையத்தளம்
www.colomboarchdiocesancatholicpress.com

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

உங்களது அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்), நவீன பிரதியாக்கம் (டுப்ளோ), வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும், பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல், அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்







தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.co



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்